# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 ஐப்பசி / அக்டோபர் 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


**<u>தேசத்தின் குரல்</u>**

## ’வன்னியர் வழக்கில்’ உயர்நீதிமன்றத் தீர்ப்பு:

## சாதி அரசியலைச் சாய்க்க ஒரு நல்வாய்ப்பு!



சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் நீதியர் எம். துரைசாமியும் கே. முரளிசங்கரும் நவம்பர் முதல் நாள் வழங்கியுள்ள தீர்ப்பு வன்னிய சாதியினருக்கு 10.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு செல்லாது என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்லி விட்டது.

இந்தத் தீர்ப்பு வன்னிய சாதி மக்களுக்கு ஏற்பட்ட தோல்வி போல் காட்டி அம்மக்களிடையே சாதி வெறியூட்டும் முயற்சிகள் நடைபெறுகின்றன. வன்னியர்களுக்கு இதுவரை இருந்த

## உள்ளே...


1. தேசத்தின் குரல்
2. நவம்பர் ஒன்று - எதிர் - சூலை 18 -6
3. தீண்டாமை பேசும்: ஆசாரக் கோவை சமணமா? சைவமா? *-12*
4. ஆட்சி மாற்றமும் அடிப்படை மாற்றமும்; ஒரு மார்க்சிய அரிச்சுவடி*-23*
6. இளைஞர் அரண் அறைகூவல்-*27*
7. மாயப் பொருளாதார மீட்சி*-33*
8. பணவீக்கம்*-45*
9. பணவீக்கக் குறியீடுகள்*-50*
10. பணவீக்கம் குறித்த மார்க்சியக் கோட்பாடு*-56*



பதிவு எண் :R.Dis. No. 1964/2014



இடஒதுக்கீடே இந்தத் தீர்ப்பினால் பறிபோய் விட்டது போல் பீதியூட்ட முயல்கின்றனர். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களுக்கு வழங்கப்படும் 20 விழுக்காடு இடஒதுக்கீட்டில் வன்னியர்கள் பெற்று வந்த பங்கில் இந்தத் தீர்ப்பினால் எந்தக் குறையும் வந்து விடவில்லை. 10.5 விழுக்காடு தனி இடஒதுக்கீட்டினால் இந்தப் பங்கு கூடுமா? குறையுமா? என்பதற்குத் தெளிவான விடை காண்பதற்கான தரவுகள் ஏதுமில்லை. சில மாவட்டங்களில் கூடலாம், வேறு சிலவற்றில் குறையலாம். ஆனால் வன்னியர்கள் உட்பட ஒடுக்குண்ட மக்களின் எல்லாச் சிக்கல்களுக்கும் இடஒதுக்கீட்டை மட்டுமே தீர்வாகக் காட்டுவது சாதி அரசியலை வளர்க்கத்தான் பயன்படும். தமிழ்த் தேசியச் சமூகநீதிக்கான போராட்டத்திலிருந்து அவர்களை விலக்கி நிறுத்திப் பதவி அரசியல் சதுரங்கத்தில் பகடைகளாக்கி விடும்.

உழைக்கும் பெருந்திரளாகிய வன்னியர்களை ஏனைய மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் போட்டிக்காரர்களாக முன்னிறுத்தியதுதான் 10.5% தனி இடஒதுக்கீட்டால் கண்ட பலன். இந்தத் தனி இடஒதுக்கீட்டை உயர் நீதிமன்றம் செல்லாதடித்து விட்டதையே ஒரு நல்வாய்ப்பாகப் பயன்படுத்தி வன்னியர்களிடையிலான சாதி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க சமூகநீதி ஆற்றல்கள் முன்னுக்கு வர வேண்டும்.

வன்னியருக்கான இடஒதுக்கீட்டுச் சட்டம் ஏன் செல்லாது? என்பதற்கான காரணங்களை

உயர்நீதிமன்றம் பட்டியலிட்டுள்ளது. இவற்றுள் பலவும் நாம் முன்பே (சமூகநீதியும் சாதி அரசியலும், உரிமைத் தமிழ்த் தேசம், 2021 சூலை) சுட்டிக்காட்டியவைதாம்.

இந்திய அரசமைப்பு ஒரு சாதியை மட்டும் தனி அலகாய்க் கொண்டு இடஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யவில்லை. சமூகவகையிலும் கல்விவகையிலும் பிற்பட்ட வகுப்புகள் (SOCIALLY AND EDUCATIONALLY BACKWARD CLASSES - SEBC) என்பதே அரசமைப்பு குறிப்பிடும் வரையறை. அட்டவணைச் சாதிகள் (SC), அட்டவணைப் பழங்குடிகள் (ST) தவிர. ஏனைய பிற்பட்ட வகுப்புகள் (O**BC)** என்ற தொகுப்புகள் மட்டுமே சட்டப்படி செல்லும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரை ஏனைய பிற்பட்ட வகுப்புகளைத்தான் பிற்பட்ட வகுப்புகள் (BC) என்கிறோம். அவர்களுக்குள் மிகவும் பிற்பட்ட வகுப்புகள் (MBC) என்ற புதிய தொகுப்பைச் செய்துள்ளோம். இவையல்லாமல் சாதியின் பேரில் வன்னியர் என்ற புதிய தொகுப்பை நுழைப்பது சட்டப்படி செல்லாது. ஒற்றைச் சாதியை இடஒதுக்கீட்டுக்குரிய அலகாகக் கருதும் நடைமுறை எங்கும் இல்லை, சட்டப்படி இருக்கவும் முடியாது.

நடுவண் அரசாயினும் சரி, மாநில அரசாயினும் சரி, சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க இந்திய அரசமைப்பில் இடமில்லை.

எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அஇஅதிமுக ஆட்சி 2021 பிப்ரவரி 26ஆம் நாள் தமிழ்நாட்டுச் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரின் கடைசி நாளில் கடைசி அமர்வில் கடைசி நேரத்தில் இயற்றிய சட்டம்தான் வன்னியர் சமுதாய மக்களுக்கு 10.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் (தமிழக அரசு சட்டம் 8/2021). 102ஆம் அரசமைப்புத் திருத்தச் சட்டத்துக்கும் (2018) 105ஆம் அரசமைப்புத் திருத்தச் சட்டத்துக்கும் (2021) இடைப்பட்ட காலத்தில் இந்த 2021 பிப்ரவரி 21ஆம் நாள் வருகிறது. அதாவது அந்த நாளில் சட்டப் பேரவைக்கு இப்படியொரு சட்டம் இயற்றும் அருகதை இல்லை.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களுக்கு 30 விழுக்காடும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களுக்கு 20 விழுக்காடும் இடஒதுக்கீட்டுக்கு வழிசெய்யும் சட்டம் எண் 45 (1994). இந்திய அரசமைப்பின் ஒன்பதாம் அட்டவணையில் வைத்துப் பாதுகாக்கப்படுவதாகும். இந்தச் சட்டத்தை முறைப்படித் திருத்தாமல் மனம்போன போக்கில் மாற்றம் செய்ய முடியாது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 338-பி உள்ள வரை பிற்பட்ட வகுப்புகள் தொடர்பாக எம்முடிவு எடுக்கவும் மாநில அரசுக்கு அதிகாரமில்லை.

பிற்பட்ட வகுப்புகளின் மக்கள்தொகை, சமூகக் கல்வித் தகுநிலை, அரசுப் பணிகளிலான பங்கு ஆகியவை குறித்தான அளவிடத்தக்க தரவுகள் இல்லாமல் இடஒதுக்கீடு வழங்க முடியாது.

அளவிடத்தக்க தரவுகள் இல்லாமல் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களில் வன்னியர்களுக்கு (MBC - V) 10.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் முடிவு அரசமைப்பின் 14, 15, 16 உறுப்புகளை மீறுவதாகும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களை 'மிபிவ - வன்னியர்' என்றும் 'மிபிவ - சீர்மரபுச் சமுதாயம்' என்றும் மூன்று உட்பிரிவுகளாக்குவதற்கு மக்கள்தொகை தவிர புறஞ்சார் அளவுகோல்கள் ஏதுமில்லை.

சாதிக்கு சாதி தனி இடஒதுக்கீடு வழங்கினால் சிறு சாதிகளின் நிலை என்னவாகும்? அவர்கள் இடஒதுக்கீட்டால் பயன்பெறுவது என்பதே முயற்கொம்பு ஆகிப்போகும்.

வன்னியர் தனி இடஒதுக்கீட்டைச் சட்டப்படி செல்லாதென்று அறிவிக்கும் போது உயர் நீதிமன்ற நீதியர் காட்டியுள்ள சிலபல காரணங்கள் மாநிலத் தன்னாட்சிக்கு (சரியாகச் சொன்னால் தமிழ்த் தேச இறைமைக்குப் புறம்பானவை என்பதில் ஐயமில்லை. ஆனால் வன்னியர் தனி இடஒதுக்கீடு ஒன்றையே புனித இலக்காகக் காட்டி சாதி அரசியல் செய்யும் கும்பலுக்கு ஆப்படித்த அளவில் இந்தத் தீர்ப்பு வரவேற்கத் தக்கதே. இந்தத் தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இது வீண் வேலை. எடப்பாடி ஆட்சியின் சட்டத்தை அடியொற்றி அரசாணை பிறப்பித்த முக ஸ்டாலின் அரசு இப்போதும் தன் தவற்றை உணரவில்லையா? அல்லது நமக்கேன் வம்பு என்ற மனநிலையா?

நாங்களும் சமூகநீதியின் பக்கம் நிற்கிறோம் என்று பெருமை கொண்டாடும் 'இடதுசாரிகள்' இப்போதாவது இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று ஸ்டாலினுக்கு அறிவுரை சொல்லியிருக்கக் கூடாதா? திமுகவின் பிற தோழமைக் கட்சிகள், பல்வேறு இயக்கங்கள் அமைதி காப்பது ஏன்? கொளகைக் குழப்பமா? சாதி அரசியலைக் கண்டு அச்சமா? அல்லது வீரத்தை விஞ்சிய விவேகமா? தேர்தல் கூட்டணிகள், சீட்டுப் பங்கீடுகள், கோடிப் பங்கீடுகள், சின்னம் ஒதுக்கீடு எல்லாவற்றுக்குமே விவேகம் தேவைப்படுகிறதே? 'பொருளியலில் நலிந்த பிரிவினர்'க்கு (EWS) 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட

போது ஆதரித்த சிபிஎம் கட்சி அதற்குத் தேர்தலைத்தான் காரணமாக் காட்டிற்று என்பதை மறக்க முடியுமா?

இடஒதுக்கீட்டில் யாருக்கு எவ்வளவு? என்ற பூசல் நடந்து கொண்டிருக்கும் போதே, புதுத் தாராளிய முதலிய வளர்ச்சியின் விளைவுகள் இடங்களையே இல்லாமற்செய்து கொண்டிருக்கிறது. அரசும் பொதுத் துறையுமே சமூகநீதி சார்ந்த இடஒதுக்கீட்டை மறுக்கும் போக்கில் இருக்கும் போது மோதியின் அரசும், அதனைத் தாங்கியும் அதனால் தாங்கப்பட்டும் நிற்கும் அம்பானிகளும் அதானிகளுமா இடஒதுக்கீடு தரப் போகின்றார்கள்? உலக மயமும் தனியார் மயமும் தாராள மயமும் வளர்கின்றன என்றால் சமூகநீதிமயம் சுருங்கி அநீதிமயம் விரிகிறது என்று பொருள். இது வன்னியர்கள் மட்டுமல்ல, இடஒதுக்கீடு வேண்டிநிற்கும் அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை.

சமூகநீதிக்கு இடஒதுக்கீட்டின் இன்றியமையாமையை என்றென்றும் வலியுறுத்தும் போதே சமூகநீதி என்றாலே இடஒதுக்கீடுதான் என்ற கிட்டப்பார்வை குறித்து எச்சரிக்கவும் வேண்டும்.

பொதுவாகவே இடஒதுக்கீட்டுக் கோரிக்கையின் மோசமான பக்கவிளைவுகளில் ஒன்று சாதிவழி அணிதிரட்டலாகும். இடஒதுக்கீட்டை ஏனைய சமூகநீதிக் கூறுகளிலிருந்து பிரித்தெடுத்து அதற்கு மட்டுமே மிகையழுத்தம் கொடுப்பது சாதியொழிப்புக்கு அடித்தளமாக இருக்க வேண்டிய சமூகநீதிக் கோரிக்கையை சாதிக் காப்புக்கு அரணாக்கி விடும் ஆபத்து உள்ளது. பக்க விளைவுகளைக் களைந்து முதன்மை விளைவை நோக்கிப் போராட்டத்தை முன்னெடுக்க சாதி அரசியலும் பதவி அரசியலும் உதவ மாட்டா. ஒரே கள்ள நாணயத்தின் இருபக்கங்களான சாதி அரசியலும் பதவி அரசியலும் இந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பால் சம்மட்டி அடி வாங்கியுள்ளன.

சமூகநீதி சார்ந்த தமிழ்த் தேசியம் இடஒதுக்கீட்டுக்காக விட்டுக்கொடாமல் போராடும் போதே சாதியத்தைக் கட்டோடு எதிர்த்து நிற்கும். தேசியத்தின் பெயரால் இனவாதமும், சமூகநீதியின் பெயரால் சாதியமும் எம் குறிக்கோளுக்குப் பகை! சமூகநீதியின் பெயரால் நடக்கும் சாதி அரசியலை எதிர்ப்பதற்கு இந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒரு நல்வாய்ப்பு! சாதி அரசியலுக்கு விட்டுக்கொடுப்பதுதான் அரசியல் சாணக்கியம் என்று எண்ணிக் கொண்டிருப்போர் திருந்துவதற்கும் இது நல்வாய்ப்பு!

## நவம்பர் ஒன்று - எதிர் - சூலை 18

*(பேராசிரியர் திரு ராஜன் குறை கிருஷ்ணன் அவர்களுக்குத் திறந்த மடல்)*

*அன்புசால் மதிப்பிற்குரிய பேராசியர் திரு ராஜன் குறை கிருஷ்ணன் அவர்களுக்கு.*

*"தமிழ்நாடு நாள் ஜூலை 18 - வரலாற்று தத்துவம் வலியுறுத்தும் உண்மை!" என்ற தலைப்பில் நீங்கள் எழுதியுள்ள கட்டுரையைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன். எது தமிழ்நாடு நாளாகக் கொண்டாடத்தக்கது? என்ற கருத்துக் களத்தில் உங்கள் பார்வையை முன்வைத்துள்ளீர்கள்:*

*"*



*ஒரு மக்கள் தொகுதி தங்கள் உரிமைகள் குறித்த தன்னுணர்வினை வெளிப்படுத்துவதே அதன்*

வரலாற்று உணர்வாகும். மக்கள் தங்களை ஒரு தொகுதியாக உணர்வது என்பதே மக்கள் என்று கூட்டு அடையாளத்திற்கு, குழும அடையாளத்திற்கு அடிப்படை. 'திராவிட தமிழர்' என்ற வரலாற்றுத் தன்னுணர்வே தமிழக மக்களாட்சி அரசியலின் அடிநாதம். அதுவே திராவிட அரசியல் சித்தாந்தம். அந்த தன்னுணர்வு கொண்ட மக்கள் தங்கள் சட்டமன்றத்தில் அரசை தமிழ்நாடு அரசு என்றும், அதன் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியை தமிழ்நாடு என்றும் பெயரிட்டுக்கொண்ட நாள் 1967 ஜூலை 18. அதுவே திராவிட தமிழரின் வரலாற்று தன்னுணர்வு சட்டமன்றத்தில் அதிகாரபூர்வமாக பதிவேற்றம் பெற்ற நாளாகும்."

ஐயா, மக்கள் தொகுதி என்ற வரையறையில் தமிழ்மக்களை அடையாளப்படுத்த முடியாதா? தமிழ்த் தேசிய இனம், தமிழ்த் தேசம் என்ற வரையறைகளை ஏற்றுக் கொள்கின்றீர்களா? இல்லையா? தமிழ் மக்களை ஒரு மக்கள் தொகுதியாக நீங்கள் கருதவில்லையா?

"தமிழ்நாடு தமிழருக்கே!" என்பதுதான் தந்தை பெரியார் இறுதி வரை எழுப்பிய முழக்கம். இந்த முழக்கம் சரியா? தவறா? "தமிழ்நாடு திராவிடருக்கே!" என்று அவர் முழங்கியிருக்க வேண்டும் எனக் கருதுகின்றீர்களா? அல்லது "தமிழ்நாடு திராவிடத் தமிழருக்கே!" என்று அவர் முழங்கியிருக்க வேண்டுமா?

சென்னை மாநிலச் சட்டமன்றமாக இருந்த தமிழ்நாடு சட்டமன்றம் தன் ஆட்சிப்புலத்துக்கு சூலை 18ஆம் நாள் "தமிழ்நாடு" என்று பெயரிட்டுக்கொண்டது தமிழ் மக்களின் வரலாற்றுத் தன்னுணர்வு பதிவேற்றம் பெற்ற நாள் என்றுதான் அறிஞர் அண்ணா தொடங்கி அனைத்துத் தமிழர்களும் கருதினோம், கருதிக் கொண்டும் இருக்கிறோம். நீங்கள் சொல்வது போல் அது திராவிடத் தமிழரின் வரலாற்றுத் தன்னுணர்வு பதிவேற்றம் பெற்ற நாளாக இருக்க வேண்டும் என்றால் "திராவிட நாடு" என்றோ "திராவிடத் தமிழ்நாடு" என்றோ பெயரிட்டிருக்க வேண்டும் அல்லவா?

உங்கள் பார்வையில் நீங்கள் உறுதியாக இருந்தால் "தமிழ்நாடு" என்ற பெயரை மறுத்து, திராவிட நாடு என்றோ திராவிடத் தமிழ்நாடு என்றோ பெயரிடுமாறு வலியுறுத்த வேண்டும் அல்லவா? ஏன் அப்படிச் செய்யவில்லை?

"தமிழகத்தில் உருவான தன்னுணர்வு கொண்ட மக்கள் தொகுதியை திராவிட தமிழர் என்று

*அறிவதே பொருத்தமானது" என்கிறீர்கள். அப்படியானல் அந்த மக்கள் தொகுதிக்குரிய ஆட்சிப்புலத்தைத் "திராவிடத் தமிழ்நாடு" என்றழைக்குமாறு வலியுறுத்த வேண்டியதுதானே? "திராவிடவியம்" என்று சொல்லி விட்டு திராவிட நாட்டை ஏன் கைவிட்டீர்கள் ஐயா?*

*நீங்கள் சொல்கின்றீர்கள்:*

*"பண்பாடு, மொழி, நிலப்பகுதி ஆகிய மூன்றில் ஆரிய பண்பாட்டை மறுதலிக்கும் திராவிட பண்பாட்டு அடையாளமே முதன்மையாக விளங்குகிறது. அது தமிழ்நாட்டில் தமிழுணர்வைத் தனக்கு ஆதாரமாகக் கொள்கிறது. ஆனால் பார்ப்பனீய, ஜாதீய எதிர்ப்பின் சொல்லான திராவிடம் என்ற சொல்லை தமிழுடன் எப்போதும் இணைத்துக் கொள்கிறது."*

*திராவிடப் பண்பாட்டுக்குத் தமிழ்நாட்டில் தமிழுணர்வு ஆதாரம் என்றால், கேரளத்தில் மலையாள உணர்வும், கர்நாடகத்தில் கன்னட உணர்வும், ஆந்திரத்தில் தெலுங்கு உணர்வும் அதே திராவிடப் பண்பாட்டுக்கு ஆதாரமாக இருக்க வேண்டுமல்லவா? மெய்யாகவே இருக்கிறதா? அல்லது இனியாவது இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவீர்களா? மொழிவழித் தேசியத்தை ஒரு வகைப் பண்பாட்டுத் தேசியத்தால் பின்னுக்குத் தள்ளப் பார்க்கின்றீர்கள். தமிழ்ப் பண்பாடு என்ற ஒன்றே இல்லையா? அல்லது அதுவும் ஆரியப் பண்பாட்டில் அடக்கமா? தமிழுணர்வு வேண்டாம், தமிழ்ப்பண்பாடும் வேண்டாம், தமிழ்நாடு என்ற பெயர் மட்டும் வேண்டுமா?*

*இந்த முரண்பாட்டுக்குத் தந்தை பெரியாரே தீர்வு கண்டார். 1955 அக்டோபர் 10ஆம் நாள் வெளியிட்ட அறிக்கையில் அவர் சொன்னார்:*

*``தமிழ்நாட்டை விட்டு மலையாளிகள், ஆந்திரர்கள், கன்னடர்கள் பிரிந்து போன பின்பும் கூட தமிழகத்துக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் இருக்கக் கூடாது எனச் சிலர் சூழ்ச்சி செய்கிறார்கள். அந்தப் பெயரை மறைத்து 'சென்னை நாடு' என்று பெயர் சூட்டவும் போகிறார்கள் என்று தெரிகிறது. தமிழ், தமிழ்நாடு என்ற பெயர் இந்த நாட்டுக்கு இல்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்து*

வெற்றி பெற்றுவிடக் கூடாது."

1956 நவம்பர் முதல் நாள் தமிழ் மக்களுக்குத் தனி மாநிலம் அமைந்ததைப் பெரியார் ஆர்வத்துடன் வரவேற்றார். மொழிவழி மாநிலப் பிரிப்பு என்பது திராவிட மக்களை இந்திய அரசு பிரித்த நாள் என்ற உங்கள் அபத்தப் பார்வையைப் பெரியாரோ அண்ணாவோ எம்ஜிஆரோ கலைஞரோ மு.க. ஸ்டாலினோ ஒருநாளும் ஏற்க மாட்டார்கள். பெரியாரும் அண்ணாவும் மொழிவழி மாநில அமைப்பை விரும்பியதால்தான் தட்சிணப்பிரதேசத் திட்டத்தை வன்மையாக எதிர்த்து முறியடிக்க உதவினார்கள் என்பதை மறக்க வேண்டாம்.

நீங்கள் சொல்கின்றீர்கள்: "அ.இ.அ.தி.மு.க பெயரில் அண்ணாவையும், திராவிடத்தையும் வைத்திருந்தாலும் அகில இந்திய சார்புள்ள எதிர்ப்புரட்சி இயக்கம். அதனால்தான் இந்திய அரசு தன் நிர்வாக வசதிக்காக மொழிவாரி மாநிலங்களை உருவாக்கிய தினத்தை தமிழ்நாடு நாளாக அறிவித்தது. நவம்பர் 1ஆம் தேதி என்பது திராவிட கூட்டாட்சி குடியரசை இந்திய ஒன்றியம் தன்வயப்படுத்திக்கொண்ட நாள் என்று வேண்டுமானால் கூறலாம். அதில் திராவிட இயக்கம் கொண்டாடுவதற்கு என்ன இருக்கிறது என்பதே கேள்வி."

தமிழ்நாடு நாளின் வரலாறு தெரியாதா உங்களுக்கு? மொழிவழி மாநிலங்கள் அமைப்பதற்கான போராட்ட வரலாறு தெரிந்துமா இப்படி எழுத முடிகிறது உங்களால்? கர்சான் பிரபுவின் வங்கப் பிரிவினை, காந்தியார் தலைமையேற்ற 1920 நாகபுரி காங்கிரஸ் மாநாடு தொடங்கி மொழி வழி மாநிலத் தேவையை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தி திராவிட நாடு ஏட்டில் அண்ணா எழுதினாரே, நீங்கள் படித்ததில்லையா?

ஆந்திர மாநிலம் அமைவதற்காக பொட்டி சிறிராமுலுவின் உயிரீகம், "விசலாந்திரத்தில் மக்கள் இராச்சியம்" முழக்கத்துடன் பொதுமையர் (கம்யூனிஸ்டுகள்) வழிநடத்திய வீரத் தெலங்கானா ஆய்தப் போராட்டம், மார்சல் நேசமணி தலைமையிலான குமரி விடுதலைப் போராட்டம், மங்கலங்கிழார் தலைமையிலான வட எல்லை மீட்புப் போராட்டம், மபொசியின் போராட்டம்,

சங்கரலிங்கனாரின் உயிரீகம் எல்லாமே உங்களுக்குத் துச்சமா?

திராவிட இயக்கம் தமிழர்களுக்கான மொழிவழி மாநில அமைப்பை வரவேற்றிருக்கக் கூடாது, எதிர்த்திருக்க வேண்டும் என்பதுதான் உங்கள் நிலைப்பாடா? வெளிப்படையாகச் சொல்லுங்கள்

ம.பொ.சி. கேட்டுக் கொண்டபடி முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 1981 நவம்பர் முதல் நாளை தமிழ்நாடு உருவான பொன்விழாவாக அறிந்தேற்றுக் கொண்டாடினார். அதே போல 2006ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் நவம்பர் முதல் நாளை அறிந்தேற்று தமிழ்நாடு உருவான பொன்விழாவைக் கொண்டாடினார். சான்றோர் பேரவை சார்பில் நடந்த தமிழகப் பெருவிழாக்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் என நம்புகிறேன்.

பல ஆண்டுக் கால வற்புறுத்தலுக்குப் பிறகு 2019ஆம் ஆண்டுதான் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி ”நவம்பர் முதல் நாள் இனி ஒவ்வோராண்டும் தமிழ்நாடு உருவான நாளாகக் கொண்டாடப்படும்” என்றார். 2020 நவம்பர் முதல் நாளுக்கு மு.க. ஸ்டாலினும் வாழ்த்துச் சொன்னார்.

சூலை 18ஆம் நாளைக் கொண்டாட வேண்டும் என்று இதற்கு முன் எப்போதாவது நீங்கள் கேட்டதுண்டா? 1967 சூலை 18ஆம் நாள் தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை முன்மொழிந்து ஒருமனதாக நிறைவேற்றிக் கொண்ட அறிஞர் அண்ணா அடுத்த ஆண்டு 1968 சூலை 18ஆம் நாளைக் கொண்டாடினாரா? 1969ஆம் ஆண்டு சூலை 18ஆம் நாளைக் கலைஞர் கொண்டாடினாரா? பிறகு எப்போதாவது கொண்டாடினாரா? யாரும் எக்காலத்திலும் கொண்டாத சூலை 18ஆம் நாளைக் கொண்டாட வேண்டும் என்று 2021 நவம்பர் 1 நெருங்கும் போது சாலமன் பாப்பையா போன்றவர்களுக்குத் தோன்றியதன் மருமம் என்னவாக இருக்கக் கூடும்? மொழிவழி மாநில அமைப்பைச் சீர்குலைக்கும் திட்டம் கொண்ட தில்லி வல்லரசியத்துக்கு நவம்பர் ஒன்று கசந்ததன் விளைவுதானா இந்த சூலை 18 ஞானோதயம்?

சூலை 18 தமிழ்நாடு பெயர் சூட்டப்பட்ட நாளன்று என்பதால்தான் அண்ணா அந்த நாளைக் கொண்டாட வில்லை. ஏனென்றால் அந்த அதிகாரம் மாநிலச் சட்ட மன்றத்துக்கு இல்லை.

இந்திய அரசமைப்புச் சட்டப்படி (உறுப்பு 3) நாடாளுமன்றத்துக்குத்தான் அந்த அதிகாரம் உண்டு. 1968 நவம்பர் 24ஆம் நாள்தான் நாடாளுமன்றம் தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம் இயற்றியது.

*தமிழ்நாடு பெயர் சூட்டப்பட்ட நாள் சூலை 18 அல்ல, நவம்பர் 24தான் என்பது நம் மாநிலத்துக்கு நாமே பெயர் சூட்டிக்கொள்ள முடியாத நம் அடிமைநிலையைத்தான் நினைவூட்டும்.*

*அப்படியிருந்தும் நம் போராட்டத்தால்தான் இந்தப் பெயர் கிடைத்தது என்பதால் கொண்டாடலாம். தமிழ்நாடு பெயர் சூட்டிய நாளைக் கொண்டாடலாம். அண்ணா கொண்டாடவும் செய்தார். 1968 திசம்பர் முதல் நாள் தமிழ்நாடெங்கும் விழாவெடுத்தார் - அந்த விழாக்களில் சங்கரலிங்கனாருக்கு நன்றி பாராட்டினார். ஆனால் தமிழ்நாடு பெயர் மாற்றம் 1969 சனவரி 14 பொங்கல் நாளில்தான் நடைமுறைக்கு வந்தது. தமிழ்நாடு நாள் நவம்பர் முதல் நாள், தமிழ்நாடு பெயர் வென்ற நாள் சனவரி 14 அல்லது தை முதல் நாள் என்பதுதான் சரியாக இருக்க முடியும்!*

*இப்படியிருக்க, நவம்பர் முதல் நாள் தமிழ்த்தேசிய எழுச்சி நாளாக வளர்ந்து வருவதைப் பொறுக்க முடியாதவர்கள் இவ்வாண்டு அந்த நாள் நெருங்கி வரும் போது அதைக் கெடுக்கவே சூலை பதினெட்டைக் கிளப்பி விட்டுள்ளார்கள் என்பது என் ஐயப்பாடு!*

*போகட்டும். உங்கள் கட்டுரையில் விவாதத்துக்குரிய பல செய்திகள் இருப்பினும் நவம்பர் ஒன்று - எதிர் - சூலை பதினெட்டு என்ற இந்தப் புள்ளியை மட்டும் எடுத்துக் கொண்டேன். நீங்கள் தொடர்வீர்களானால் மற்றச் செய்திகளைப் பற்றியும் விவாதிக்க விரும்புகிறேன்.*

*இந்தத் தலைப்புக்குத் தொடர்பில்லாத ஒன்றே ஒன்றை மட்டும் இப்போதே சுட்டி வைக்கிறேன். ”உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்பதுதான் கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையின் முழக்கமாக இருந்தது” என்று எழுதியுள்ளீர்கள். பொதுமைக் கட்சியின் கொள்கையறிக்கையில் (COMMUNIST MANIFESTO) அப்படி ஒரு முழக்கமே இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். **”WORKERS OF ALL COUNTRIES, UNITE!”** என்பதைத் தவறாக மொழிபெயர்த்துள்ளார்கள். இந்தத் தமிழாக்கப் பிழை எவ்வளவு மோசமான கருத்தாக்கப் பிழைகளுக்கு வழிகோலுகிறது என்பதற்கு உங்கள் கட்டுரையே சான்று!*

*தியாகு,*

*பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்.*

- *03/11/2021.*

**தீண்டாமை பேசும்**

# ஆசாரக் கோவை சமணமா? சைவமா?

*தியாகு*

சென்ற செப்டெம்பர் 12ஆம் நாள் சென்னையில் நாம் தமிழர் கட்சி சார்பில் “தமிழரா? திராவிடரா?” என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் “சங்கத் தமிழர் வாழ்வியல்” என்ற தலைப்பில் உரையாற்றிய ஆசான் ம. செந்தமிழன் சமண முனிவர் வச்சிரநந்தியை வைது தீர்ப்பதையும், அதில் வெளிப்படும் காலவழுவையும் சென்ற (செப்டம்பர்) இதழில் கண்டோம்.

திரமிள சங்கம் அமைத்த வச்சிரநந்தியை செந்தமிழன் வன்சொல் கொண்டு சாடக் கேட்கலாம்: தமிழ்க் கழகத்தை "திரமிள சங்கம் என்று அவன் சொன்னான்"! அம்மட்டோ? திரமிள சங்கத்தை நிறுவி விட்டு "அவர்கள் சில நூல்களை இயற்றினார்கள், அந்த நூல்களில் ஒன்றுதான் ஆசாரக் கோவை… இதை தமிழ்ச் சங்க நூல்கள் என்ற வரிசையில் இப்போது வைத்திருக்கிறார்கள். இது பெரிய பாவம், பிழையான கருத்து. இது ஒரு வகையில் திரித்தல். இந்த ஆசாரக் கோவைதான் சில குடிகளில் பிறந்தவர்களை பிராமணர்கள் தீண்டக்கூடாது என்ற விதியை எழுதிய முதல் தமிழ்நூல்.”

ஆசான் ம. செந்தமிழன் முதலில் ஒரு வினாவிற்கு விடையிறுக்கட்டும்: ஆசாரக் கோவையைத் தமிழ்ச் சங்க நூல்கள் என்ற வரிசையில் வைத்தது யார்? எப்போது?

சங்க இலக்கியம் என்பது பொ.ஊ.மு. (கிமு) 500 முதல் பொ.ஊ. (கிபி) 200 வரையிலான காலத்தில் இயற்றப் பெற்ற செவ்வியல் இலக்கியத்தைக் குறிக்கும். நாளது வரை கண்டறியப்பட்டுள்ள படி 473 புலவர்கள் இயற்றிய 2,381 சங்கப் பாடல்கள் உள்ளன. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமான 18 நூல்கள் சங்கத் தமிழ் நூல்கள் ஆகும். இவற்றுக்குப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று பேர். இந்தப் பட்டியலில் ஆசாரக் கோவைக்கு இடமில்லை. அது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகத்தான் மதிக்கப்பெறுகிறது.

ஆசாரக் கோவையைத் தமிழ்ச் சங்க நூல் வரிசையில் சேர்ப்பது பெரிய “பாவம்” என்றால், செந்தமிழன் அந்தப் பாவத்தைச் செய்யாதிருக்கட்டும்! கருமவினைக் கொள்கையை நம்பாத ஒருவர் “பாவம்” என்ற சொல்லை வெகு இயல்பாக ஆள்வது வியப்பாக உள்ளது.

எனக்குத் தெரிந்த வரை ஆசாரக் கோவையைத் தமிழ்ச் சங்க நூல்கள் என்ற வரிசையில் யாரும் சேர்க்கவில்லை. சேர்த்திருந்தால் பிழைதான்! யாரும் சேர்க்காமலிருந்து செந்தமிழன் யாரோ சேர்ப்பதாகச் சொல்வராயின் அது இன்னும் பெரிய பிழை!

ஆசாரக் கோவை தீண்டாமையை வலியுறுத்தும் முதல் தமிழ் நூல் என்கிறார் செந்தமிழன். முதல் என்ற அடைமொழி ஆய்வுக்குரியது. ஆனால் அது தீண்டாமை பேசும் நூல் என்பது மெய்!

ஆசாரக் கோவையில் இடம்பெற்றுள்ள வெண்பா வடிவிலான 100 பாடல்கள், மக்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் (ஆசாரங்கள்) எவையெவை எனக் கூறுகின்றன. உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் போன்ற நடைமுறை வாழ்க்கைக் கூறுகள் முதற்கொண்டு, யாரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ன செய்ய வேண்டும் போன்ற வழிமுறைகளும் சொல்லப்பட்டுள்ளன. சுருக்கமாக அகத்தூய்மை, புறத்தூய்மை என இரண்டுக்கும் வழிகாட்டும் முயற்சி எனக் கொள்ளலாம். எவை செய்தல் நன்மையுண்டாக்கும், எவை செய்தால் தீமைகள் நேரும் என்பதை விளக்குவது நூலின் நோக்கம்.

“இன்றியமையாது நீராடுதல்” என்ற ஆசாரக்கோவை பாடல் எப்பொழுது நீராட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

”தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை
உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது
வைகு துயிலோ டிணைவிழைச்சுக் கீழ்மக்கள்
மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்
ஐயுறா தாடுக நீர்.” (10)

ஒரு பத்துச் செயல்களைக் குறித்து அவற்றில் எதைச் செய்தாலும் நீராடுதல் வேண்டும் என்கிறது இந்த ஆசாரம். அந்தப் பத்தில் ஒன்று “கீழ்மக்கள் மெய்யுறல்”, அதாவது கீழ்மக்கள் எனப்படுவோரைத் தீண்டி விட்டால் உடனே குளிக்க வேண்டுமாம். தீட்டுக் கழிப்பதற்காக நீராட வேண்டுமாம்!

“செய்யத்தகாதன” என்ற ஆசாரக்கோவை பாடல் எவற்றைச் செய்யக் கூடாது என்று அறிவுறுத்துகிறது.

”நீருள் நிழற்புரிந்து நோக்கார் நிலமிராக்
கீறார் இராமரமுஞ் சேரார் இடரெனினும்
நீர்தொடா தெண்ணெ யுரையார் உரைத்தபின்.
நீர்தொடார் நோக்கார் புலை.” (13)

பாடலின் பொருள்: செய்யக் கூடாதவை என்பனவற்றைச் செய்ய விரும்பாத ஒருவர், நீருக்குள் தனது நிழலை விரும்பி நோக்க மாட்டார், தரையைக் கீற மாட்டார், இரவில் மரத்தின் பக்கம் இருப்பதைத் தவிர்ப்பார், நோய் கொண்ட நேரத்தில் எத்தனை இடையூறு என்றாலும் நீரைத் தொடாமல் எண்ணெய்யை உடலில் தேய்க்க மாட்டார், எண்ணெய் தேய்த்த பின்னர் நீராடாமல் புலையரை (கீழ்மக்கள் எனக் கூறப்படுவோர்) தனது கண்ணால் நோக்க மாட்டார் (அதாவது 'கண்டு முட்டு', புலையரைப் பார்த்தாலே தீட்டு வரும் என்ற மூட நம்பிக்கை).

எண்ணெய் தேய்த்த பின் நீராடாமல் புலையரைக் காணக் கூடாதாம்! தீண்டாமையினும் கொடிய காணாமை!

"நன்னெறி" என்ற ஆசாரக்கோவைப் பாடலும் எவற்றைச் செய்யக் கூடாது என்று அறிவுறுத்துகிறது."

"பெரியார் உவப்பன தாமுவவார் இல்லஞ்
சிறியாரைக் கொண்டு புகாஅர் அறிவறியாப்
பிள்ளையே யாயினு மிழித்துரையார் தம்மோ
டளவளா வில்லா விடத்து." (68)

பாடலின் பொருள்: பெரியோர்கள் விரும்புகின்றவற்றைத் தானும் அடைய விரும்பாமையும், தங்கள் வீட்டுக்குள் கீழ்மக்கள் என்போரை உள்ளே அழைத்து வராமலிருப்பதும், தனக்கு அறிமுகமில்லாதவர் ஒருவரை, அவர் அறியா வயது சிறு பிள்ளையாக இருப்பினும் இழிவாகப் பேசாமல் இருப்பதும் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிகளாகும்.

கீழ்மக்கள் எனப்படுவோரை வீட்டுக்குள் அழைத்து வரக்கூடாதாம்! சில நன்னெறிகளைச் சொல்லி அவற்றுக்கு நடுவில் தீண்டாமைத் தீநெறியை நுழைக்கும் உத்தி கவனத்துக்குரியது.

(4) "குரவர் பெயர் முதலியன கூறாமை" என்ற ஆசாரக்கோவை பாடலும் எவற்றைச் செய்யக்கூடாது என்று அறிவுறுத்துகிறது.

தெறுவந்துந் தங்குரவர் பேருரையா ரில்லத்து
உறுமி நெடிதும் இராஅர் - பெரியாரை
என்று முறைகொண்டு கூறார் புலையரையும்

நன்கறிவார் கூறார் முறை. (80)

**பாடலின் பொருள்:** எவை நன்மை தருபவை என நன்கு அறிந்த ஒருவர், சினம் கொண்டு வெகுண்ட நிலையிலும் மூத்தோரைப் பெயர் சொல்லிக் குறிப்பிடமாட்டார், வீட்டில் உள்ளோரிடம் சினம் கொண்டாலும் அதை நீட்டிக்க மாட்டார், தம்மிற் பெரியாரை முறைப் பெயர் கொண்டு இழிவுபட அழைக்க மாட்டார், கீழ்மக்களாகக் கருதப்படுவோரிடம் முறைமை பாராட்டி உறவு கொண்டாட மாட்டார்.

நல்லவற்றைச் சொல்லி அவற்றோடு அல்லவற்றைக் கலந்து கொடுக்கும் அதே தந்திரம்தான்!

(5) “அந்தணர் வாய்ச்சொல் கேட்டல்” என்ற ஆசாரக்கோவை பாடலும் எவற்றைச் செய்யக் கூடாது, எவற்றைச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

”தலைஇய நற்கருமஞ் செய்யுங்கா லென்றும்
புலையர்வாய் நாள் கேட்டுச் செய்யார் - தொலைவில்லா
அந்தணர்வாய்ச் சொற்கேட்டுச் செய்க அவர்வாய்ச்சொல்
என்றும் பிழைப்ப திலை.” (92)

**பாடலின் பொருள்:** அறிவுள்ளவர் முக்கியத்துவம் வாய்ந்த நற்செயல்களைச் செய்யும்பொழுது என்றும் புலையரிடத்து நாள் கேட்டுச் செய்யார், ஒழுக்கம் குறையாத ஐயர் ஒருவர் குறித்துத் தரும் நாளில் நற்செயல்களைச் செய்வார். ஏனெனில் அவர் சொல்வது என்றும் பிழையாத் தன்மை கொண்டது. அதுவே நன்மையும் தரும். இங்கு அந்தணர் ஒழுக்கம் குன்றாதவர் என்று காட்டும் பொழுது, புலையர் ஒழுக்கமற்றவர் என்பது சொல்லாமல் புரிந்து கொள்ள வேண்டிய கருத்து. மேலும், புலையர் என்று இப்பாடலில் குறிப்பிடப்படுபவர் வள்ளுவர் என்ற சோதிடங்கூறும் கீழ்வகுப்பார் என்று உரை நூல் விளக்கம் தருகிறது.

தமிழகத்தில் குல உயர்வுதாழ்வு, தீண்டாமை என்ற கருத்தாக்கங்கள் எக்காலத்தில் தோன்றின என்பதும், கீழ்மக்கள் என்று ஒரு சிலர் எப்பொழுது விலக்கப்பட்டனர் என்பதும் ஆய்வுக்குரியன.

ஆனால் ஆசாரக் கோவை சங்க காலத்துக்குரியதாக இருக்க வாய்ப்பே இல்லை என்பதற்கு மேற்காட்டிய பாடல்களையே அகச் சான்றாகக் கொள்ளலாம். எப்படியும் அது சங்கம் மருவிய காலத்துக்குரியதாகவோ இன்னும்கூட பிற்காலத்தியதாகவோ இருக்கக் கூடும்.

தீண்டாமையை ஒழுக்கங்களில் ஒன்றாகக் காட்டும் இந்த ஆசாரக் கோவையை இயற்றியது யார்? எப்போது? ஆசாரக் கோவையை இயற்றியவர் திரமிள சங்கத்தவர், அதாவது சமணர் என்பது ஆசான் ம. செந்தமிழனின் சாற்றுரை! அந்தத் திரமிளம் தீது! ஆகவே திராவிடம் தீது!

இதுதான் அவர் கற்பிக்கும் எதிர் ஏரணம்! ஆசாரக் கோவையை இயற்றியவரின் பெயர் தெரியாத ஒன்றோ அல்லது ஐயுறு ஆய்வுக்குரியதோ அன்று. பெருவாயின் முள்ளியார் இயற்றியதுதான் ஆசாரக் கோவை! யார் இந்தப் பெருவாயின் முள்ளியார்?

**ஆசாரக் கோவை நூலை இயற்றியவர் யார்? என்று செந்தமிழன் எவர் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றாலும், அவர் ஒரு சமணர் என்று உறுதியாக உணர்த்துகின்றார். இரண்டாவதாக அது களப்பிரர் காலத்திய நூல் என்பதையும் அறுதியிட்டுரைக்கின்றார்.**

**பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய ஆசாரக்** கோவையை **இயற்றியவர் பெருவாயின் முள்ளியார் என்பதில் ஐயத்துக்கிடமில்லை. இவர் சமணரா? இல்லை என்பதற்கு ஆசாரக் கோவையிலேயே அகச் சான்று உள்ளது. ஆசாரக் கோவையின்** 100 **பாக்களுக்கும் நுழைவாயிலாக அமைந்திருப்பது தற்சிறப்புப் பாயிரம். அதனை அப்படியே தருகிறேன்:**

**ஆர் எயில் மூன்றும் அழித்தான் அடி ஏத்தி,**

**ஆரிடத்துத் தான் அறிந்த மாத்திரையான், ஆசாரம்**

**யாரும் அறிய, அறன் ஆய மற்றவற்றை**

**ஆசாரக்கோவை எனத் தொகுத்தான்-தீராத்**

**திரு வாயில் ஆய, திறல் வண், கயத்தூர்ப்**

**பெருவாயின் முள்ளி என்பான்.**

நூலின் தற்சிறப்புப் பாயிரத்தால், அப்பாடலின் கருத்தினைக் கொண்டு இந்நூலாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தற்சிறப்புப் பாயிரத்தின் முதலடியே இதனைத் தெளிவாக்கி விடுகிறது.

"ஆர் எயில் மூன்றும் அழித்தான் அடி ஏத்தி" என்றால் என்ன?

எயில் என்றால் மதில். மூன்று மதில்களை அழித்தவன் யார்? அரக்கர்களின் மூன்று கோட்டைகளை அழித்தவன் சிவபெருமான் என்பது சிவனடியார்தம் நம்பிக்கை. "ஆர் எயில் மூன்றும் அழித்தான்" ஆகிய சிவனின் அடி தொழுது நூலியற்றும் ஆசிரியர் சமணராக எப்படி இருக்க முடியும்? அவர் சிவனடியாராக மட்டுமே இருக்க முடியும். வண் கயத்தூர் என்பது அவரது ஊர்ப்பெயர். முள்ளியார் என்பது அவரது இயற்பெயர்.

வண் கயத்தூர் பெருவாயின் முள்ளியார் எனும் சிவனடியார் இயற்றிய ஆசாரக்கோவை தீண்டாமை பேசும் தீநூல் என்றால் அதற்கான பழி சமண முனிவர் கூட்டமாகிய திரமிள சங்கத்தை எப்படிச் சாரும் என்பதை ஆசான் ம. செந்தமிழன் அவர்களே விளக்க வேண்டும்.

ஆசாரக் கோவையை தமிழ்ச் சங்க நூல் வரிசையில் வைத்திருப்பது பெரும் பாவம் என்கிற செந்தமிழன் அப்படி வைத்திருப்பது யார் என்று சொல்லவ இல்லை. எப்படியாயினும் அது சங்கத் தமிழ் நூலன்று, ஆனால் அந்நூலின் காலக் குறிப்பு என்ன? என்பதைக் கணிக்கத்தான் வேண்டும்.

ஆசாரக்கோவை களப்பிரார் ஆட்சியில் திரமிள சங்கத்தில் இயற்றப்பட்ட நூல் என்று கற்பித்துச் சமணத்தின் மீது பழிசுமத்துவது ஆசான் ம. செந்தமிழனின் முயற்சியாக அமைவதால், அந்நூலின் காலக் கணிப்பு ஆய்வுக்குரியதாகிறது.

நூலாசிரியரை அறிந்து கொள்ள நூலிற்குள்ளேயே அகச் சான்று இருப்பது போல் நூலின் காலக் கணிப்புக்கும் அகச் சான்றுகள் உள. பார்ப்போம்.

தீண்டாமை பேசும் ஆசாரக்கோவை களப்பிரர் ஆட்சிக் காலத்தில் திரமிள சங்கத்தில்

சமணரால் இயற்றப்பட்டது என்பது ஆசான் ம. செந்தமிழனின் துணிபு. நூலை இயற்றிய வண கயத்தூர் பெருவாயின் முள்ளியார் சமணரல்லர் என்பது மட்டுமல்லாமல், சிவனடியாரே ஆவார் என்பதைத் தற்சிறப்புப் பாயிரத்தின் சான்று கொண்டு பார்த்தோம். ஆனால் ஆசாரக் கோவையின் காலக் கணிப்பு அவ்வளவு எளிதன்று. அதில் மாறுபாடுகளுக்கு இடம் இருக்கத்தான் செய்யும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஆசாரக்கோவை சைவ சமயத்தைச் சேர்ந்தவரால் இயற்றப்பட்ட நூல் என்று சொல்லும் அந்நூலின் சீராளர் (பதிப்பாசிரியர்) தமிழறிஞர் தி. செல்வகேசவராய முதலியார் அது கடைச்சங்கம் மருவிய காலத்து நூல்களுள் ஒன்று என்றும் கணிக்கிறார். இந்நூலுக்கு மூலநூல் ஆரிடம் என்னும் வடநூலெனவும் பாயிரத்திலிருந்து தெரிவதாகச் சொல்கிறார். இந்நூல் தொகுக்கும் ஆசாரங்கள் யாவும் சுக்ர ஸ்மிருதி நூலின் பாடல்கள் என்று வடமொழிப் புலவர் கூறுவதாகவும் எடுத்துக்காட்டுகின்றார்.

ஆனால், பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை தமது ‘தமிழ் இலக்கிய வரலாறு’ நூலில், ஆபஸ்தம்ப கிருஹ்யசூத்திரம், ஆபஸ்தம்ப தர்ம சூத்திரம், போதாயனதர்ம சூத்திரம், கௌதம சூத்திரம், விஷ்ணு தர்ம சூத்திரம், வசிஷ்ட தர்ம சூத்திரம், மனு ஸ்மிருதி, உசனஸ ஸம்ஹிதா, ஸங்க ஸ்மிருதி, லகு ஹாரித ஸ்மிருதி ஆகிய பல நூல்கள் ஆசாரக் கோவை நூலுக்கு அடிப்படையாய் அமைந்துள்ளன எனக் குறிப்பிடுவார்.

ஆசாரக் கோவை குறித்து மயிலை சீனி. வேங்கடசாமி சொல்வதாவது:

“பல்வேறு வெண்பா வகைகளும் விரவி, கடவுள் வாழ்த்து தவிர்த்து நூறு பாடல்களைத் தன்னகத்தே கொண்டதாய் இந்நூல் விளங்குகிறது. இந்நூல் மக்கள் அன்றாட வாழ்வில் கொள்ள வேண்டுவன இவை, தள்ள வேண்டுவன இவை என்பதைக் கூறுகிறது. எனவே, இதனை வடமொழிக் கருத்துகள் வழங்குவது போன்றதொரு நூல் என்பர். இந்நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் என்பவர். இவர், வடமொழியில் இருடிகள் சொல்லிய ஆசார சீலங்களைத் தொகுத்து ஆசாரக்கோவை என்னும் இந்நூலில் கூறுவதாகச் சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று செப்புகின்றது. இவர் காலமும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டாய் இருக்கலாம் என்பர்.”

(மயிலை சீனி. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம்)

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு"

எனப் பாடப்பெறும் நாலடியார் முதல் ஏலாதி முடியவுள்ள பதினென்கீழ்கணக்கு நூல்களில் திருக்குறள் உள்ளிட்ட ஒருசில மட்டும் கடைச் சங்க காலத்திலேயே எழுதப்பட்டவை. பெரும்பாலானவை களப்பிரர் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டவை. ஒருசில களப்பிரர் ஆட்சிக் காலம் முடிந்த பின் எழுதப்பட்டவை. ஆசாரக்கோவை ஒப்பளவில் பிற்காலத்தியது என்பதில் ஆய்வறிஞர்கள் உடன்படுவர். அகச் சான்றுகளின் அடிப்படையில் ஆசாரக்கோவையின் காலத்தைக் கணிக்க அறிஞர் வையாபுரிப்பிள்ளை செய்யும் முயற்சி கவனத்துக்குரியதாக உள்ளது.

வையாபுரிப் பிள்ளை எழுதுகிறார்:

“ஆனால் ’ஆரிடத்து’ என்று ஆசிரியர் பொதுப்படக் கூறுவதாலும், ‘தொகுத்தான்’ என விவரித்தலாலும், ஸ்மிருதிகள் பலவற்றிலிருந்து ஆசாரக்கோவைப் பொருள்கள் தொகுக்கப்பெற்றன என்று கொள்ளுதலே தக்கது. சுக்கிர ஸ்மிருதி எனப்படும் உசனஸ் ஸம்ஹிருதைக்கும் ஆசாரக்கோவைக்கும் பல கருத்தொற்றுமைகள் காணப்படுகின்றன....”

“பிற்பட்ட ஸ்மிருதிகளிலிருந்து சில கருத்துக்கள் ஆசாரக்கோவையில் கொள்ளப்பட்டுள்ளன. ’நிறையுவா மெல்கோலுந் தின்னார்’ (ஆசாரக்கோவை 17) என்பது அவற்றுள் ஒன்று. இது சுக்ரஸ்மிருதியிற் காணப்படவில்லை. லகுஹாரீ தஸ்மிருதியில் உள்ளது. இந்த ஸ்மிருதியின் காலமும் கி.பி. 600க்குப் பிற்பட்டதே. ’மண்டலஞ்செய் எண்ணல்’ (ஆசாரக் கோவை 19) என்பது மற்றொன்று. இது சுக்ரஸ்மிருதியில் காணப்படுகிறது; ஆனால் இச்செய்யுளின் இறுதியடியிற் காணப்படும் “கொண்டாரரக்கர் குறித்து’ என்னுங்கருத்து இதன்கண் இல்லை. இரண்டும் ஒருங்கே காணப்படுவது லகுசா தா தபத்திலும்’ லகு அத்திரிஸ்மிருத்தியிலும் தான். இவ்விரண்டும் கி.பி. 600க்குப் பிற்பட்டனவே. வடமொழியில் இந்த ஸ்மிருதிகள் கி.பி. 600க்குப் பின் தோன்றியவையாயின், இவை தமிழ்நாட்டிற்பரவி, மொழிபெயர்க்க வேண்டும அவசியம் ஏற்பட்டு மொழிபெயர்க்கப்படுவதற்கு சுமார் 150 ஆண்டுகள் சென்றிருக்கலாம். ஆகவே சுமார் கி.பி 750ல் ஆசாரக்கோவை இயற்றப்பட்டிருக்க வேண்டும்....”

(எஸ். வையாபுரிப்பிள்ளை, திரிகடுகமும் சிறுபஞ்ச மூலமும் [பழைய உரையுடன்])

பல்வேறு வடமொழி நூல்களோடு ஆசாரக்கோவைக்குள்ள ஒற்றுமையைக் காட்டி அவற்றின் காலக்கணிப்பைத் துணைகொண்டு ஆசாரக்கோவையின் காலக்கணிப்புக்கு வழியமைக்கும் வையாபுரிப் பிள்ளையின் பார்வையை மறுத்தல் அரிதே. மனுஸ்மிருதியோடு ஆசாரக்கோவை ஒத்திருப்பதைக் காட்ட அவர் காட்டும் சான்றினைப் படமாகக் கீழே இணைத்துள்ளேன்,

இவ்வாறு ஆசாரக்கோவையின் அகச் சான்றுகளைக் கொண்டு அது பிற்பட்ட ஸ்மிருதிகளிலிருந்து தொகுக்கப்பட்டது என்பதையும் கி.பி. 750 வாக்கில் இயற்றப்பட்டது என்பதையும் வையாபுரிப் பிள்ளை நிறுவுகிறார்.

எப்படிப் பார்ப்பினும் ஆசாரக்கோவை களப்பிரர் காலத்திய நூலாக இருக்க வாய்ப்பில்லை எனத் தெரிகிறது. ஒருவேளை அப்படி ஒரு வாய்ப்பிருப்பதாக ஆசான் ம. செந்தமிழன் கருதினால், அதற்குச் சில சான்றுகள் தர முடிந்தால் நன்று. ஆனால் அப்போதும் ஆசாரக் கோவை சமணர் இயற்றிய நூலாகி விடாது. அது சிவனடியார் பெருவாயின் முள்ளியர் இயற்றிய நூல் என்பதை மறுக்கவே இயலாது.

சமணம் ஆரியத்துக்கு இசைவானது என்றும் சைவம் ஆரியத்துக்கு எதிரானது என்றும் கருத்துருவாக்க செந்தமிழன் செய்யும் முயற்சிக்கு ஆசாரக்கோவை பற்றிய அவரது பழிதூற்றல் உதவாது. சமணத்தின் மீது காழ்ப்புக் கொள்ள ஆசாரக்கோவையை அடிப்படையாகக் கொள்ளும் ஆசானின் முயற்சி வீண்.

சமணத் துறவிகளின் திரமிள சங்கத்தை நிறுவிய வச்சிரநந்தி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் சுமத்தும் ஆசான் ம. செந்தமிழன் தீண்டாமைத் தீமைக்கான பழியைச் சமணத்தின் மீது சுமத்துகிறார், அதற்கு ஆசாரக் கோவை என்ற நூலையும் அது இயற்றப்பட்ட காலத்தையுமே சான்றாகக் கொள்கின்றார்.

ஆசாரக் கோவையை இயற்றியவர் சமணரல்லர் என்பது மட்டுமல்ல, அவர் பெருவாயின் முள்ளியார் என்னும் சிவனடியாரே என்பதற்கு அந்நூலின் தற்சிறப்புப் பாயிரமே சான்றாக இருக்கக் கண்டோம்.

ஆசாரக் கோவை களப்பிரர் ஆட்சிக் காலத்தில்தான் இயற்றப்பெற்றது என்பதற்கும் சான்றேதுமில்லை. களப்பிரர் ஆட்சி போய் விட்ட பிறகே ஆசாரக் கோவை இயற்றப்பட்டது என்பது தமிழறிஞர் பலரின் துணிபுமாகும்.

ஆசாரக் கோவை அதன் உள்ளடக்கத்தில் தமிழில் எழுதப்பெற்ற மூலநூலன்று என்பதும்

ஒரு முகன்மைச் செய்தியாகும். அதன் கருத்துகள் எங்கிருந்து பெறப்பட்டன என்பதிலிருந்து ஆரியச் சிந்தனைகள் எவ்வாறு தமிழ் மரபுக்குள் நுழைந்தன என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

கடந்த 1916ஆம் ஆண்டில் ஆசாரக் கோவையைச் சீர்மை செய்து வெளியிட்ட பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு டி. செல்வகேசவராய முதலியார் தமது பதிப்புரையில் சொல்கிறார்:

"இந்நூலுக்கு ஆதாரம் ஆரிடம் என்பது தற்சிறப்புப் பாயிரத்தில் குறித்திருக்கின்றது. இலக்கண விளக்கவாசிரியர் வழிநூலை விளக்கும் சூத்திரவுரையில் மொழிபெயர்ப்பு நூலுக்கு ஆசாரக் கோவையை உதாரணம் காட்டியிருக்கிறார். இந்நூலிற்கூறிய ஆசாரங்கள் பெரும்பானமையாய் வடமொழியிலுள்ள சுக்ரஸ்ம்ருதியிலிருந்து தொகுத்தவை என வடநூற்புலவர் கூறுகின்றனர்…."

வையாபுரிப்பிள்ளை சொல்கிறார்:

"… இந்நூல் வடமொழி நூலின் வழித்தோன்றியது என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை…. ஆனால் ஆரிடத்து என ஆசிரியர் பொதுப்படக் கூறுவதாலும், தொகுத்தான் என விவரித்தலாலும், ஸ்மிருதிகள் பலவற்றிலிருந்து ஆசாரக் கோவைப் பொருள்கள் தொகுக்கப் பெற்றனவென்று கொள்ளுதலே தக்கது. சுக்ரஸ்மிருதி எனப்படும் உசனஸ் ஸம்ஹிதைக்கும் ஆசாரக்கோவைக்கும் கருத்தொற்றுமைகள் பல காணப்படுகின்றன.

"… ஆசாரக்கோவையில் காணப்படும் உண்ணுங்கால் நோக்குந்திசை கிழக்கு" என்பது ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்திலும் (I 11, 31, 1) வசிஷ்ட தர்ம சூத்திரத்திலும் வந்துள்ள கருத்தேயாகும். இவ்விரண்டு சூத்திரங்களும் கி.மு. 300க்கு முன் தோன்றியன என்பர். 'ஒழிந்த திசையும் வழிமுறையால் நல்ல' என்பது கி.பி. 200க்கு முன் தோன்றியதாகக் கருதப்படும் மனுதர்ம சாஸ்திரத்தில் (II, 52) வந்துள்ளது. எனவே இவை சுக்ரஸ்மிருதியினின்றும் கொள்ளப்பட்டனவெனல் பொருந்தாது. ஆசாரக்கோவையிலுள்ள பல கருத்துக்கள் சுக்ரஸ்கிருதியில் காணப்படவில்லை. உதாரணமாக 'ஆசாரம் வீடு பெற்றார்' இவரெனக் கூறும் இறுதிச் செய்யுளைக் கூறலாம். இங்ஙனமே சுக்ரஸ்மிருதியிலுள்ள கருத்துக்கள் பல ஆசாரக்கோவையிற் காணவில்லை. 3ஆம் அத்தியாயத்தின் பிற்பகுதியிலுள்ள சிரார்த்த நியமங்களும், அதன்பின் இறுதியிலுள்ள 9ஆம் அத்தியாயத்தில் வரும் கழுவாய் நியமங்களும் உதாரணங்களாம். பிற தர்மசூத்திரங்களிலும் காணப்படாது, சுக்ரஸ்மிருதியில் மட்டும் காணப்படும் கருத்துக்கள் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம்…."

இவ்வாறான அகச் சான்றுகளிலிருந்து வையபுரிப்பிள்ளை ஆசாரக்கோவையின் காலக்கணிப்புக்குச் செல்வதை முன்பே பார்த்தோம். ஆசாரக்கோவையின் ஆசாரங்கள் எங்கிருந்து பெறப்பட்டன என்பதற்கு மேலும் பல சான்றுகளை அவர் தருகிறார்:

"பிற்பட்ட ஸ்மிருதிகளிலிருந்து சில கருத்துக்கள் ஆசாரக்கோவையில் கொள்ளப்பட்டுள்ளன. 'நிறையுவா மெல்கோலுந்தின்னார்' (ஆசாரக்கோவை 17) என்பது அவற்றுள் ஒன்று. இது சுக்ரஸ்மிருதியிற் காணப்பட வில்லை. 'லகுஹாரீ தஸ்மிருதியில்' உள்ளது...."

வடமொழி ஸ்மிருதிகளை கிரந்த வரிவடிவத்தில் எடுத்துக்காட்டி அவற்றுக்கு நிகரான ஆசாரக்கோவையின் ஆசாரங்களையும் வையாபுரிப்பிள்ளை பட்டியலிடுவது கருத்துக்குரிய இலக்கிய ஒப்பாய்வு என்பேன்.

இந்த ஒப்பாய்வின் அடிப்படையில் ஆசாரக் கோவையைக் காலங்கணிக்க வையாபுரியார் முற்படும் போது சிவனடியாராகிய பெருவாயின் முள்ளியார் கோத்துக் கொடுக்கும் ஆசாரங்களின் மூலம் ஆரியமே என்பதும் தெளிவாகிறது. ஆசாரக்கோவையை சமண நூல் என்று கற்பித்துக்கொண்டு ஆசான் ம. செந்தமிழன் சீறித் தொடுக்கும் கணைகள் சிவனியத்துக்கு எதிராகத் திரும்புகின்றன. இதுதான் சைவம் என்றால் சைவத்துக்கு எதிராகத் திரும்புகின்றன. இந்த சைவம் வைதிகத்துக்கு எதிரானதென்று எப்படிச் சொல்ல இயலும்? சைவம் வைதிகத் தொற்றினால் பீடிக்கப்பட்டமைக்குத்தான் ஆசாரக்கோவையைச் சான்றாகக் கொள்ளத்தகும்.

இந்த அடிப்படையில் ஆசாரக்கோவையின் ஆசிரியர் "பெரும்பாவம் செய்து விட்டார், அவரது குற்றத்தை மறக்காதீர்கள், மன்னிக்காதீர்கள்" என்று செந்தமிழனைப் போல் பொங்க வேண்டியதில்லை. வரலாற்று நிகழ்வுகளை ஆய்வு செய்யும் போது உவத்தல் காய்தலுக்கு இடமில்லை. காலங்கடந்து எவரையும் கழுவேற்றும் மனநிலை உயிர்ப்புள்ள அறிஞர்களுக்கு ஏற்றதன்று.

தீண்டாமை பேசிய முதல் தமிழ் நூல், செந்தமிழன் பார்வையில், ஆசாரக்கோவைதான் என்பது மெய்யானால் அது ஒரு சிவனடியார் ஆரியந்தழுவி இயற்றிய நூல் என்பதில் ஐயமில்லை. சமணத்துக்கு எதிராக விரல் நீட்ட அதில் ஒன்றுமில்லை. சமணத்தின் மீது சினங்கொள்ள வேறு அடிப்படை இருப்பின் எடுத்துக் காட்டலாம். ஆசாரக்கோவை அதற்கு உதவப் போவதில்லை.

**கவிஞர் தணிகைச்செல்வன்:**

# ஆட்சி மாற்றமும் அடிப்படை மாற்றமும்
# ஒரு மார்க்சிய அரிச்சுவடி

*தியாகு*

## மதிப்புரை

தமிழ்நாட்டில் செவ்வியக்கம் தோற்றுவித்த செம்பாவலர்களில் முதன்மையான ஒருவர் தோழர் தணிகைச் செல்வன். வெறும் பாவலராகவே நின்று விடாமல் திறமிகு குமுக அறிவியல் கோட்பாட்டளராகவும் திகழ்ந்தவர், இன்றும் திகழ்ந்து வருகிறவர் என்பது இவர்க்குரிய தனிச்சிறப்பு.

என்னைப் பொறுத்த வரை முப்பதாண்டு காலத்துக்கும் மேலாக அவரைப் பின்தொடர்ந்து வருகிறேன். அவரது அழகொளிர் பாத்திறனையும் ஆழ்ந்த மார்க்சிய ஆய்திறனையும் நன்கறிவேன். நான் 1985ஆம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலையான பின் மதுரையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கட்சி மாநாட்டில் தமுக்கம் கலையரங்கு நிறைந்து வழிந்த கூட்டத்தில் அவர் தெறிக்க விட்ட சரவெடிக் கவிதையில்தான் “ஓ, கவிஞர் தணிக்கைச் செல்வன்!” என்று அறிமுகம் பெற்றேன்.

மார்க்சிஸ்ட் கட்சிக்குள் தேசிய இனச் சிக்கல் தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் தோழர் தணிகைச் செல்வனின் பங்கிற்கு இந்த நூலின் வரவேற்புரையே பதமாகும். தோழர் தணிகையின் முன்மொழிவை மதிப்பிற்குரிய தோழர் 'ஏபி' (ஏ. பாலசுப்பிரமணியன்) அவர்கள் ஆர்வத்துடன் வழிமொழிந்தும் 'மற்றவர்கள்' மறுதலித்தமை சிபிஎம் கட்சியின் முதற்கோணலாகிப் போயிற்று.

தணிகை எழுதிய சிபிஎம் -எதிர்- சிபிஎம் என்ற நூல் என்னைப் போன்ற பலருக்கும்

அக்கட்சியின் முன்பின்முரணிலைகளை வெளிச்சமிட்டுக் காட்டிற்று.

பொதுமையராய் இருப்பதும் பொதுமைக் கட்சியில் உறுப்பினராய் இருப்பதும் ஒன்றல்ல. மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து கொள்கை மாறுபாடுகளுக்காக நீக்கப்பட்ட பிறகு, பார்க்கப் போனால் அவ்வாறு நீக்கப்பட்ட பிறகுதான், தோழர் தணிகையின் மார்க்சிய ஆய்வுநோக்கு மேலும் சுடர் விட்டுள்ளது. பாட்டாளியத்துக்கும் தலித்தியத்துக்கும் தமிழியத்துக்குமான முக்கூடலை இயங்கியலாக அவர் விளக்கி எழுதியிருக்கும் பல எழுத்துகளைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

ஆட்சி மாற்றமும் அடிப்படை மாற்றமும் என்ற இந்நூலை ஒரு மார்க்சிய அரிச்சுவடியாக அவர் வடித்துக் கொடுத்துள்ளார். ஈழத்தமிழர் இனவழிப்பின் தாக்கத்தால் இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் தமிழ்நாட்டில் இளைஞர்களின் அரசியல் ஈடுபாடு பெருகியுள்ளது. இந்த இளைஞர்களின் உணர்வியல் ஆர்வத்துடிப்புக்கு அறிவியல் உரமூட்ட வேண்டியுள்ளது. ஆட்சிமாற்ற முழக்கங்களின் பின்னால் எளிதில் இழுபடும் இந்த இளையோர் கூட்டத்துக்கு அடிப்படை மாற்றத்தின் தேவையை உணர்த்தும் கடமையை தணிகையின் இந்நூல் செவ்வனே செய்துள்ளது.

கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் என்ன செய்து விட்டார்கள்? “கனவுகளின் இடத்தில் அறிவியலை அமர்த்தினார்கள்” என்பார் இலெனின்.
தமிழ்நாட்டு இளைஞர்களின் விடியற்கனவுகள் ஆட்சிமாற்றம் என்று சுருங்கி ஆள் மாற்றம் என்றே கருகி விடக் கூடாது என்று இந்த முதிர்பாவலர் கவலையுற்றதால் அடிப்படை மாற்றத்தின் தேவையை மார்க்சிய வெளிச்சத்தில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அரசியல் ஆர்வமுள்ள இளைஞர்கள் - அகவை கூடியிருந்தாலும் மனத்தால் இளைஞர்களாகவே இருப்பவர்களும் கூட - இந்நூலைப் படித்துப் பயன் பெற வேண்டும்.

ஆனால் அரிச்சுவடியோடு படிப்பை நிறுத்திக் கொண்டுவிடக் கூடாது என்று அன்போடு எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலில் இந்திய நாட்டு முதலாளர்களை வகைப்படுத்திக் குணங்குறிக்கும் பகுதி (பக்கம் 49) குறித்துச் சில கூடுதல் குறிப்புகளைத் தர வேண்டுமெனக் கருதுகிறேன். எளிமைப்படுத்தி சொல்ல வேண்டும் என்ற தணிகையின் அக்கறையைப் புரிந்து கொள்கிறேன். அதே போது மிகையெளிமை குறை செய்யும் என்ற கவலையோடு இந்தக் குறிப்புகளைத் தருகிறேன்:

தரகு முதலாளர், வணிக முதலாளர், வட்டி முதலாளர், தொழில் முதலாளர், வங்கி முதலாளர், நிதிமுதலாளர் என்பன இலாபமீட்டும் வழிமுறை சார்ந்த பொருளியல் வகையினங்கள் (economic categories). சிறு முதலாளர், பெருமுதலாளர் என்ற பாகுபாடு முதலின் அளவை மட்டும் காட்டும். ஒரு பெருமுதலாளர் வணிகமுதலாளராகவோ தொழில் முதலாளராகவோ இருக்கலாம். நிதிமுதல் ஆளும் முற்றாளுமை முதலாளராகவே கூட இருக்கலாம். தேசிய முதலாளர் என்பதும் வல்லரசிய முதலாளர் என்பதும் சமூக-அரசியல் வகைப்பாடுகள் (socio-political classifications).

இந்திய ஆளும் வகுப்பாகிய முதலாளர்களை எடுத்துக் கொள்வோம். இவர்கள் கொழுத்த முதல் கொண்டவர்கள் என்பதால் பெருமுதலாளர்கள். வங்கி முதலையும் தொழில் முதலையும் இணைத்துக் கொண்ட நிதி முதலாளர்கள். அங்காடியில் போட்டிகளை ஒழித்து வரும் ஏகபோக (முற்றாளுமை) முதலாளர்கள். இந்திய அளவிலும் பன்னாட்டளவிலும் பல்வேறு தேசங்களுக்கும் நிதிமுதல் ஏற்றுமதி செய்து அரசியல் ஆளுகையை விரிவாக்க முயலும் அளவில் வல்லரசிய ஏகாதிபத்திய) முதலாளர்கள்.

இவர்களை இடம்பொருள்ஏவல் கருதி முதலளவைப் பொறுத்து பெருமுதலாளர்கள் என்றும், முதலியல்பைப் பொறுத்து முற்றாளுமை (ஏகபோக) முதலாளர்கள் என்றும், அரசியல் ஆளுகையைப் பொறுத்து வல்லரசிய (ஏகாதிபத்திய) முதலாளர்கள் என்றும் வரையறை செய்யலாம்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

அரசின் வகுப்பியல்பு (வர்க்கத் தன்மை), புரட்சியின் கட்டம், புரட்சியின் மூலவுத்தி, புரட்சியின் போர்முனைகள் ஆகியன குறித்து இந்தியப் பொதுமை இயக்கத்தின் கூறுகளுக்கிடையிலான வேறுபாடுகளைப் பட்டியலிடுவதோடு தமிழ்நாட்டில் மாற்றம் விரும்புவோர் இவ்வகையில் செய்ய வேண்டிய தேர்வுகளையும் சுட்டி நிற்கிறது இந்நூல். முதன்மை முரண்பாடு இந்திய வல்லரசுக்கும் தமிழ்த் தேசத்துக்குமான தேசிய முரண்பாடே என்று கூர்மையாகச் சுட்டுவது சிறப்பு!

சமூகத்தின் அடிக்கட்டுமானத்தில் சாதிக்குள்ள இடம் குறித்து கார்ல் மார்க்சின் மடல் ஒன்றிலிருந்து நறுக்கென்ற ஒரு சொல்லியத்தை எடுத்துக்காட்டியிருப்பது இவ்வகையில் ஆய்வு மாணவனாகிய எனக்குக் கருத்துக்குரியதாய் இருந்தது. மார்க்சின் இந்தப் பார்வையை என்னால் சாதி குறித்தான அம்பேத்கரின் சுடர்மிகு ஆய்வுகளில் உய்த்துணர முடிகிறது. அடிக்கட்டுமானம். மேற்கட்டுமானம் ஆகிய இரு தளங்களிலும் சாதியின் இருப்பை இயங்கியல் வழியில் விண்டுரைக்க நம் கவிஞர் மேலும் நமக்கு வழிகாட்ட வேண்டும்.

மார்க்சைக் கற்று மார்க்சே எல்லாம் என்றிருப்பதும் தமிழைக் கற்று தமிழே எல்லாம் என்றிருப்பதுமான இரட்டை இறுமாப்புகளையும் விலக்கி, மார்க்சையும் தமிழையும் கற்றவர், பணிவுடன் கற்றுக் கொண்டே இருப்பவர் என்பதால்தான் இயங்கியலுக்கும் பொருண்மியத்துக்கும் குறள் விளக்கம் தர தணிகையால் முடிகிறது. (பொருண்மியம் = பொருள்முதல்வாதம் = materialism).

இந்நூலைப் படியுங்கள். இது உங்கள் பசியைத் தணிக்காது, தூண்டும்! மென்மேலும் தூண்டும்! தணிக்கத் தணிக்க எழும் அறிவுப் பசியைத் தணிக்கத் தணிக்கத் தணிகை நூல் உங்களைத் தூண்டும்!

(நூல் இன்னும் வெளிவரவில்லை. விரைவில் வெளிவரும்.)

இளைஞர் அரண் அறைகூவல்

# இளைஞர்கள்தமக்குஅரண்! தமிழ்மக்களுக்குஅரண்!

### அழைக்கிறது இளைஞர் அரண்!

தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் இளைஞர்கள் சற்றொப்ப 30 விழுக்காடு இருப்பதாகக் கணிக்கப்படுகிறது. இளமையின் செயல்துடிப்பைக் கருத்தில் கொள்ளும் போது, தமிழ்நாட்டின் வாழ்விலும் வளர்ச்சியிலும் இளைஞர்களின் பங்கு இந்த விழுக்காட்டையும் விஞ்சி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இளைஞர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. இந்திய விடுதலைப் போராட்டத்திலும், மொழியுரிமைப்போராட்டங்களிலும், பிற வகையிலான தமிழ்மக்களின் உரிமைப் போராட்டங்களிலும் இளைஞர்களின் பங்கு மகத்தானது.

கடந்த 2008-09 காலத்தில் தமிழீழ மக்களுக்கு எதிரான இனவழிப்புப் போர் உச்சம் தொட்ட போது, "போரை நிறுத்து!" என்ற முழக்கத்துடன் பலதரப்பட்ட இளைஞர்களும் இலட்சக்கணக்கில் உணர்ச்சிப் பெருக்கோடு களங்கண்டனர். அப்போதைய இளைஞர் எழுச்சியின் ஒரு வெளிப்பாடாகவே வீரத்தமிழன் முத்துக்குமாரின் உயிரீகம் அமைந்தது. அது வரை தமக்குள்ள சிக்கல்களுக்காகக் கூடத் தெருவில் இறங்கிப் போராடியறியாத இளைஞர்களும் மாணவர்களும் கூட இப்போது ஈழத் தமிழர் இனவழிப்பைத் தடுக்கக் கிளந்தெழுந்து போராடக் கண்டோம். அந்தப் போராட்டம் தோல்வியில் முடிவுற்றாலும் அதன் தாக்கம் தமிழக மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு ஆழ்ந்த அரசியல் கல்வி புகட்டிச் சென்றது என்பதே மெய்.

மெரினாவில் ஒரு வசந்தம் என்று வரலாறும் இலக்கியமும் குறித்துக் கொண்ட சல்லிக்கட்டுப் போராட்டம் தமிழக இளைஞர்களும் மாணவர்களும் அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவோடும் ஈட்டியதொரு பெருவெற்றியாகும்.

இன்றைய நிலையில் அரசின் கொள்கைகள் இளைஞர்தம் வாழ்வை நெருக்கடியில்

தள்ளியுள்ளன. கல்வித் துறையில் வரைமுறையற்ற வணிகமயம் எல்லா நிலைகளிலும் கல்வியைக் கடைச் சரக்காக்கி விட்டது. ஏழை எளிய, ஒடுக்குண்ட மாணவர்களுக்கு உயர்கல்வி எட்டாக்கனியாகி விட்டது. நீட் போன்ற தகுதிகாண் நுழைவுத் தேர்வுகள் மருத்துவம் போன்ற துறைகளில் ஒடுக்குண்ட விளிம்புநிலை மாணவர்களின் வாய்ப்பை மென்மேலும் பறித்துக் கொள்கின்றன. அனைவருக்கும் கல்வி எனும் கனவுகள் கரைந்து மறைந்து ஒருசிலருக்கு மட்டுமே கல்வி எனும் கெடுநிலை முழுமையாக மீண்டு வரும் அச்சுறுத்தல் வளர்ந்து வருகிறது.

இந்திய அரசு கொண்டுவந்துள்ள தேசியக் கல்விக் கொள்கை என்பது கல்வித் துறையை வணிகமயமாக்குவதோடு காவிமயமாக்கவும், மையத்தில் அதிகாரக் குவிப்பை வளர்க்கவுமான முயற்சியே ஆகும். இந்த முயற்சியை எதிர்த்து நின்று தமிழ்நாட்டின் நலன்களைக் காக்க வேண்டிய தமிழக அரசோ 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' எனும் பெயரில் அதே தேசியக் கல்விக் கொள்கையின் சில கூறுகளைச் செயலாக்க முற்பட்டுள்ளது. நீட் தேர்வைக் கூட நீக்கம் செய்ய முடியாத நிலையில் தமிழ்நாட்டின் சமூகநீதி மரபு என்பதெல்லாம் சொல்லளவிலேயே நிற்கிறது. உயர்கல்வியில் மட்டுமின்றி பள்ளிக் கல்வியிலேயே தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வியின் பரப்பு மென்மேலும் சுருக்கப்பெறும் அவலம் காணப்படுகிறது. ஆங்கிலம், இந்தி, சமற்கிருதம் ஆகிய அயல்மொழிகளின் திணிப்பு அன்னைத் தமிழைக் காணாமலாக்கி வருகிறது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற முழக்கம் மறந்து போய் எங்கே தமிழ்? எதிலே தமிழ்? என்று கேட்கும் நிலை தலைதூக்கி வருகிறது.

இந்தப் போக்கினை எதிர்த்துப் போராடித் தமிழ்நாட்டின் கல்வியைக் காக்கவும் அறிவியல், அறவியல் நோக்கில் மாற்றியமைக்கவும் வேண்டும் என்பது தமிழ்நாட்டு இளைஞர்கள் மாணவர்களின் முன்னுள்ள கடமை.

மாறாக, சமூக வலைத்தளங்களின் கூடாப் பயன்பாடும் சமூகக் குடிப் பழக்கம் எனப்படும் கூடிக் குடிப்பதும், போதைக்கு அடிமைப்பட்ட நிலையும், வன்முறைப் பண்பாடும் ஆபாசச்

செயல்பாடுகளும் சாதி சமய வெறியும் நம் இளைஞர்கள்-மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளன. இளைஞர்கள் இந்தச் சமூகத்தை மாற்றியமைக்கவும் தங்களைத் தாங்களே மாற்றியமைத்துக் கொள்ளவும் வேண்டிய கடமை உள்ளது.

பொருளியல் நோக்கில் மட்டுமல்ல, தன்மதிப்பு நோக்கிலும் நம் இளைஞர்கள் முகங்கொடுக்க வேண்டிய பெருந்துயராக வேலையின்மைச் சிக்கல் உருவெடுத்து நிற்கிறது. முதலிய வளர்ச்சிப் பாதைக்கே உரித்தான வறுமையும் வேலையின்மையும் புதுத்தாராளியத்தால் மேலும் மோசமாக்கப்பட்டுள்ளன. அனைத்து வகையான சுரண்டலும் ஒடுக்குமுறையும் இதனால் கடுமையாகியுள்ளன.

தனியார் துறையில் மட்டுமின்றி பொதுத் துறையிலும் அரசுத் துறையிலும் கூட ஒப்பந்தப் பணியாளர் முறை கோலோச்சுகிறது. தமிழக அரசின் மின்வாரியம் போன்ற நிறுவனங்களில் ஒப்பந்தமில்லாத ஒப்பந்தத் தொழிலாளர் முறை ஒளிவுமறைவின்றி வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள படி சற்றொப்ப ஒன்றரைக் கோடி இளைஞர்கள் (இளைஞர்கள் மட்டுமல்ல) வேலையில்லாது திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். பதிவு செய்யப்படாதவர்களின் தொகை இன்னும் பெரிது. இந்தச் சேம உழைப்புப் பட்டாளத்தின் அளவு நாளும் பெருகி வருகிறது. வேலையற்றோரைக் காட்டி அரைத் தொழிலாளர்களும் அரைத் தொழிலாளரைக் காட்டி அமைப்புசார் தொழிலாளர்களும் அச்சுறுத்தி ஒடுக்கப்படுகின்றனர். அனைத்து உழைப்பாளர்களையும் ஒன்றுபடுத்தி ஓரணியில் திரட்டும் பணி இளைஞர்களுக்காகக் காத்துள்ளது.

தமிழ்நாட்டின் உரிமைப் போராட்ட அரசியலில் இளைஞர்கள் வகித்து வந்த பங்கினை அரசுகள் திட்டமிட்டே ஒழித்து விட்டன எனலாம். குறிப்பாகக் கல்லூரிகளில் மாணவர் தலைவர் தேர்தல்கள் தடை செய்யப்பட்டன. எல்லாத் தடைகளையும் மீறி சமூக அக்கறை கொண்டு பல்வேறு உரிமைப் போராட்டங்களில் ஈடுபடும் மாணவர்களை அரசு அடக்கி ஒடுக்கி

விடுகிறது. மாணவர்கள் கல்லூரிக்குள் அரசியல் பேச முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

ஆனாலும் கடந்த பத்தாண்டுகளில் இளைஞர்கள்-மாணவர்களின் அரசியல் ஆர்வம் மீண்டும் துளிர்த்துள்ளது. மறுபுறம் எண்பதுகளுக்குப் பிறகு தலைதூக்கிய சாதி சமயக் குறுநோக்குக் கட்சிகள், அமைப்புகளின் தாக்கம் இளைஞர்கள், மாணவர்களையும் தொற்றியுள்ளது. பள்ளி கல்லூரிகளில் சாதி அடையாளங்களைக் கட்டித் திரியும் போக்கு பெருகியுள்ளது. இது தமிழ்ச் சமூகத்திற்கு பெருங்கேடு. மாணவர்கள் இளைஞர்களின் ஒற்றுமைக்கு மட்டுமல்லாமல் மக்கள் ஒற்றுமைக்கும் வேட்டு வைக்கும் படியான பெருங்கேடு.

சமூக நீதி என்பது இட ஒதுக்கீடு மட்டுமன்று. ஆனால் இட ஒதுக்கீடு இல்லாமல் சமூக நீதி இல்லை. இட ஒதுக்கீட்டுக்கான சமூக நீதிப் போராட்ட அரசியல் சாதியப் பதவி அரசியல் சிக்கிக் கொண்டுள்ளது. இதனால் மாணவர்கள் இளைஞர்கள் இடையே இட ஒதுக்கீடு குறித்து அலட்சியமும் அவநம்பிக்கையும் வளர்ந்துள்ளன. இட ஒதுக்கீட்டுக்கு வழிகாட்டியாகப் பெயர் பெற்ற தமிழ்நாட்டிலேயே சமூகநீதிக்கு எதிரான குரல்கள் உரக்க ஒலிப்பதைத் தமிழ்நாட்டின் மெய்யான சமூகநீதி ஆற்றல்கள் எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும். இடஒதுக்கீட்டுக் கோரிக்கைகளை சாதிய அரசியலுக்கு உரமாக்கிக் கொள்ளும் முயற்சிகளைத் தமிழ்நாட்டு இளைஞர்கள் முறியடிக்க வேண்டும். பொருளியலில் நலிந்த பிரிவினர் (EWS) என்ற பெயரில் இடஒதுக்கீட்டின் அடித்தளங்களைத் தகர்க்கும் நச்சுத் திட்டங்களையும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடாமல் தடுக்க வேண்டும்.

சாதிச் சமூகத்தின் காவல் கோட்டமாக விளங்கும் சொந்த சாதிக்குள் மணம் செய்யும் அகமண முறையைத் தகர்க்க இளைஞர்களால் மட்டுமே இயலும். இந்த அகமணமுறையைக் காக்க வேண்டி அவ்வப்போது ஆணவக் கொலைகள் நடப்பது தமிழ்நாடே வெட்கித்தலைகுனிய வேண்டிய செய்தி. இதனால் தமிழர் ஓர்மை சிதைக்கப்படுவதை உணர வேண்டும். காதலையும்

காதலர்களையும் பேணிக் காப்பதை இளைஞர்கள் கடமையாகக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிராக வன்கொடுமைகள் நடக்கும் போதெல்லாம் தமிழன்னையின் முகத்தில் கரி பூசப்படுகிறது. பாலியல் கல்வியும், பாலின நிகர்மை நோக்கும், மாற்றுப் பாலினத்தவர் பற்றிய புரிதலும் நம் இளைஞர்களுக்குத் தேவை..

சமூகத்தில் சரிபாதியான பெண்கள் கடந்த காலத்துடன் ஒப்பிட்டால் துறை தோறும் துறைதோறும் ஓரளவு முன்னேறியுள்ளனர். அவர்களின் உழைப்புக்கும் ஆற்றலுக்கும் தடைகளை வென்ற போராட்டத்துக்கும் கிடைத்துள்ள வெற்றி இது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற காலம் மலையேறி விட்டது. பொதுத் தேர்வு முடிவுகள் வரும் போதெல்லாம் ஆண்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு முன்னுக்கு நிற்கும் பெண்களைப் பார்த்து நாடே பூரிக்கிறது. பெண்களின் அரசியல் விழிப்புணர்வும் பங்கேற்பும் ஓரளவு வளர்ந்திருப்பினும் ஆணாதிக்கச் சமூகம் தொடர்ந்து முட்டுக்கட்டை இடக் காண்கிறோம். அரசியலில் 33% இட ஒதுக்கீடு என்பது ஆணாதிக்கச் சுவரைத் தாண்ட முடியாமல் ஆண்டுக்கணக்கில் கூண்டுக் கிளியின் பேச்சாகவே இருந்து வருகிறது. இடஒதுக்கீட்டால் பெண் பதவி பெற்றுள்ள இடத்தும் பெரும்பாலும் ஆணின் கைப்பாவையாக இருக்கவே உரிமம் தரப்பட்டுள்ளது

கல்விக்கூடங்கள், பணியிடங்கள், அலுவலகங்கள், வழிபாட்டுக்கூடங்கள், பயண ஊர்திகள் என்று எல்லா இடங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் நீக்கமற நிறைந்துள்ளன. வீட்டுக்குள்ளேயும் அவர்களுக்கு எதிரான குடும்ப வன்முறை தனிச் சட்டம் போட்டும் அடங்க மறுக்கிறது.

எல்லாத் துறைகளிலும் பெண்ணுரிமைக்காகவும் பெண் விடுதலைக்காகவும் ஆண்-பெண் நிகர்மைக்காகவும் போராடும் கடமை பெண்களுக்கு மட்டுமல்ல, அனைத்து இளைஞர்களுக்கும் உண்டு.

இன்று பூவுலகை அவசரமாக அச்சுறுத்திக் கொண்டிருக்கும் புவி வெப்பமாதல், காலநிலை மாற்றம், போன்ற சூழலியல் சீர்கெடுகள் பற்றி உணர்வு பெறுவதும் மக்களுக்கு உணர்வூட்டுவதும் இளைஞர்களின் உடனடிக் கடமையாகும்.

தமிழ்ச் சமூகம் முகங்கொடுக்கும் சிக்கல்களையும் அவற்றுக்குரிய தீர்வுகளையும் எண்ணிப்பார்த்துச் செயலாற்றும் பெருங்கடன் இளைஞர்களைச் சாரும்.

ஆகவே தமிழ்நாட்டு இளைஞர்களே! மாணவர்களே! சமூக
அநீதிகளுக்கு எதிராக நாம் ஓரணியாகத் திரண்டு உறுதியாகப் போராட இளைஞர் அரண் உங்களை அறைகூவி அழைக்கிறது,

**நாம் நமக்கு அரண், நம் தமிழ் மக்களுக்கு அரண்!**
**நாமே இளைஞர் அரண்!**

## இளைஞர் அரண் முழக்கங்கள்:

***அனைவர்க்கும் கல்வி! அனைவர்க்கும் வேலை! கல்வியும் வேலையும் அடிப்படை உரிமைகள்!***

***சமூகநீதி! சரிநிகர்வாழ்வு!***

***தமிழர் ஓர்மை! தமிழ்நாட்டின் உரிமை!***
***அறவாழ்வு! அறிவியல் நோக்கு!***
***இரந்து கேட்கும் சலுகைகள் இல்லை!***
***புவிநேயம்! இயற்கைச் சூழல் நேயம்!***
***இளையோர் எழுப்பும் உரிமை முழக்கம்!***

***நாம் நமக்கு அரண்!***

***நம் தமிழ் மக்களுக்கு அரண்!***

***நாமே இளைஞர் அரண்!***

***++++ இளைஞர் அரண் ++++***

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

# மாயப் பொருளாதார மீட்சி:

சமந்தா

இந்தியாவில் கோவிட் தடுப்பு மருந்து இருமுறை செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 17.8 விழுக்காடாகவும். ஒரு முறை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 48.5 விழுக்காடாகவும் உள்ளது. இந்தியாவில் பெருவாரியானோருக்கு கோவிட் தடுப்பு மருந்து அளிப்பது பொருளாதாரச் சரிவு மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கான முன் நிபந்தனை மட்டுமே, அதன் மூலம் மட்டுமே பொருளாதார மீட்சியை அடையமுடியாது. ஆனால் நிதியமைச்சகமும், பாஜக தலைமையும் கோவிட் தடுப்பு மருந்து அளிக்கப்படுவதையே பொருளாதார மீட்சியாகக் காண்கிறது.

கோவிட் மூன்றாவது அலை ஏற்பட்டாலும் பொருளாதார மீட்பு தொடரும் என்றும் இந்தியாவின் பொருளாதார மீட்பு, கோவிட் -19 இன் இரண்டாவது அலையால் பாதிக்கப்பட்டது, மூன்றாவது அலை நாட்டைத் தாக்கினாலும் அடுத்த மூன்று காலாண்டுகளில் பொருளாதார மீட்சி வேகமாக இருக்கும் என்று நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. கோவிட் தடுப்பு மருந்து விரைவாக அளிக்கப்படுவதும், கோவிட்-க்கு முந்தைய நிலைக்கு திரும்பும் பல பொருளாதாரக் குறியீடுகளும் இத்தகைய நம்பிக்கையை அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. இந்தப் பொருளாதாரக் குறியீடுகள் குறிப்பிடுவது வெறும் புள்ளியியல் வளர்ச்சியே தவிர உண்மையான வளர்ச்சி அல்ல. 2020-21 முதல் காலாண்டில் பொதுமுடக்கத்தால் மொத்த பொருளாக்க மதிப்பு 24.4 விழுக்காடு குறுக்கமடைந்தது. அதனுடன் ஒப்பிடும்போது, இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் வளர்ச்சி 20.1 விழுக்காடாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது உண்மையான வளர்ச்சியைக் குறிப்பிடவில்லை. பொருளாதாரம் கொரோனா தாக்கத்திற்கு முந்தைய நிலையை அடையவில்லை என்பதே உண்மை.

சில்லறை வணிகர், சிறு முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதால் இந்திய பங்குச் சந்தையில் நம்பிக்கை அதிகரித்து வருவதாகவும், நேர்முக வரி வருவாயில் அரை ஆண்டு இலக்கு ஏற்கனவே அடையப்பட்டுள்ளதாகவும், இந்தியப் பொருளாதாரம் புத்துயிர் பெறும் பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும் நிதியமைச்சர் கூறியுள்ளார்.பங்குச் சந்தையில் நம்பிக்கை ஏற்படுவது இருக்கட்டும், உண்மையான பொருளாதாரத்தில் நம்பிக்கை ஏற்படும் படி

ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறதா பாஜக அரசு. உண்மையான பொருளாதார நடவடிக்கைகளுக்கு தொடர்பில்லாத ஊக முதலீடுகளால் ஏற்படும் உயர்வை வைத்துக் கொண்டு, இந்தியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவை இட்டு நிரப்ப நிதியமைச்சர் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார்.

உயிர்கள் மற்றும் வாழ்வாதாரங்களைக் காப்பாற்ற உடனடி துயர் தணிப்பு நடவடிக்கைகளை செய்ததுடன், விநியோகக் கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொண்ட ஒரே நாடு, தொற்றுநோயின் ஆரம்பக் கட்டங்களில் வழங்கலில் நெகிழ்வுத்தன்மையை வழங்கிய ஒரே நாடு என்று நிதி அமைச்சகம் பீற்றிக் கொள்கிறது.கோவிட்-19 இந்தியா உட்பட ஒட்டுமொத்த உலகின் பொருளாதாரங்களையும் பாதித்தது. ஆனால் தொற்றுநோயால் தடுக்கப்பட்டதை விட நமது பொருளாதாரம் மிகவும் வலுவாக மீண்டுள்ளதாக பிரதமர் ந.மோடி கூறுகிறார்.

ஜன்தன் யோஜனா திட்டத்தின் மூலம் தொற்றுநோயின் முதல் மூன்று மாதங்களில் கிராமப்புற இந்தியாவில் உள்ள ஏழைகளுக்கு அவர்களின் கணக்கிற்கு ரூ .500 செலுத்தியதின் மூலம் அரசாங்கம் வெற்றிகரமாக உதவியது என்று நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். வெறும் 500 ரூபாயைக் கொண்டு வாழ்வாதாரங்களையும் உயிர்களையும் பாதுகாத்தார்களாம். இதற்கு அவமானப் படாமல், வெட்கப்படாமல் அதையே பெருமையாக பீற்றிக் கொள்வதில் பாஜகவிற்கு ஈடு இணை கிடையாது.

ஆகஸ்ட் மாதத்தில் வேலையின்மை விகிதம் 8.32 விழுக்காடாக உயர்ந்துள்ளது, 3.6 கோடிமக்கள் வேலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.சமையல் எரிவாயு உருளையின் விலை செப்டம்பரில் மேலும் 25 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. மே மாதத்திலிருந்து சமையல் எரிவாயு உருளையின் விலை 300 ரூபாய்க்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் விலை 80 டாலரை நெருங்கும் சூழலில் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் அபாயமே ஏற்பட்டுள்ளது. பணவீக்கம். வேலையின்மை, வருவாய்க் குறைவாலும் விலைவாசி உயர்வாலும் மக்களின் வாங்கும் திறன் குறைந்து, நுகர்வில் சரிவு ஏற்பட்டுள்ளது ஆனால் இந்த உண்மையான நடப்பு நிலையை கண்டு கொள்ளாது, போலிப் பெருமிதத்தில் மிதக்கிறது பாஜக தலைமை.

இந்தியாவில் முதலீட்டை ஈர்ப்பதற்கும் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் வழங்கல் பக்க

சீர்திருத்தமே ஒரே வழி என்கிறார் தலைமை பொருளாதார ஆலோசகர் (CEA) கே.வி.சுப்பிரமணியன். வரி செலுத்துவோரின் பணத்தை இலவசங்களுக்கும், தள்ளுபடிகளுக்கும் செலவளிக்காமல் மாநில அரசுகள் வழங்கல்-சார் சீர்திருத்தங்களை மேற்கொண்டு தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மூலதன செலவினங்களை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். மத்திய அரசு தன் பொறுப்புகளை தட்டிக் கழித்து அனைத்து சுமையையும் மாநில அரசுகளின் தலையில் கட்டி வருகிறது. என்ன பெரிய இலவசங்களை இந்த அரசு வழங்கியுள்ளது. ஜன்தன் கணக்குகளில் 500 ரூபாய் அளித்ததா?.அவற்றை இலவசங்கள் என்று குறிப்பிடுவது குடிமக்களை அவமானப்படுத்துவதாகும். பெருகிவரும் வறுமையும், பசி, பட்டினியும் மக்களின் நிகரத் தேவையை நிறைவு செய்வதற்கான வாங்கும் திறன் இல்லாததால் மக்கள் அவதிப்படுவதையே குறிப்பிடுகிறது.வழங்கல் பக்க சீர்திருத்தங்களை முன்னிருத்தும் பொருளாதார ஆலோசகரால் வேண்டல் பக்கத்தில் உள்ள குறைபாடுகளை ஏன் காணமுடியவில்லை. நிகரத் தேவையில் பற்றாக்குறை உள்ளதை ஏன் அங்கீகரிக்க முடியவில்லை. அதிகரித்துள்ள வேலைவாய்ப்பின்மையாலும், அதிகரித்துள்ள விலைவாசியாலும் மக்களின் வருவாய் குறைந்துள்ளது, அவர்களின் நுகர்வும் குறைந்துள்ள நிலையில் நாட்டின் ஒட்டு மொத்த வேண்டல் பற்றாக்குறையை சரிசெய்ய அரசு முன்வந்து முதலீடுகளை அதிகரித்து, வேலைவாய்ப்புத் திட்டங்களை அதிகப்படுத்த வேண்டும். பொது விநியோக முறையை விரிவுபடுத்தி அரிசி,பருப்புடன் நின்றுவிடாமல், மற்ற அத்தியாவசிய பொருட்களான பால், காய்கறிகள், பழங்கள் ஆகியவையும் மக்கள் மலிவு விலையில் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும்.

கிராமப்புறங்களில் விவசாய தொழில்களிலிருந்து பெறப்படும் உண்மையான கூலி கடந்த ஆண்டில் 4.6 விழுக்காடும், கடந்த இரண்டு ஆண்டுகளில் 0.8 விழுக்காடும் குறைந்துள்ளதாகவும் விவசாயம் அல்லாத தொழில்களுக்கு இந்த சரிவு மேலும் அதிகமாக உள்ளதாகவும் பொருளியலாளர் ஹிமான்ஷூ குறிப்பிட்டுள்ளார். கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது கூலி 6.7 விழுக்காடும், 2019 ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது 1.8 விழுக்காடும் குறைந்துள்ளது. உழைப்புச்சக்தி கணக்கெடுப்பு 2019-20 தரவுகளின் படி இந்தியாவின் சிறந்த ஊதியம் மற்றும் பாதுகாப்பு பெறும் தொழிலாளர்களுக்கு கூட உண்மையான கூலி கிராமப்புறங்களில் 1.8 விழுக்காடு குறைந்துள்ளது. ஆனால் 2017-18 உடன் ஒப்பிடும்போது நகர்ப்புறங்களில் கூலி 0.4விழுக்காடு அதிகரித்துள்ளது. 2020-21ஆம் ஆண்டுக்கான உழைப்புச்சக்தி கணக்கெடுப்பு தரவு

இன்னும் கிடைக்கவில்லை ஆனால் பெருந்தொற்றுநோய்க்கு முன்னரே கூலி வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் தொற்று நோய் தாக்கத்தால் தொழிலாளர்களின் துயர் மேலும் கடுமையாக அதிகரித்திருக்கும். 20 விழுக்காடு பொருளாதார வளர்ச்சி என்பது பெரும்பான்மையான தொழிலாளர்களின் வாழ்நிலை மேம்பட்டிருப்பதற்கான அறிகுறியாக கருதவே முடியாது. முறைசாரா துறையில் வாழ்வாதாரம், வருவாய் இழப்புகள் ஜிடிபி மதிப்பீடுகளில் வெளிப்படுவதில்லை என்பதால் ஜிடிபி தரவுகள் போதாக்குறையானவை என்கிறார் ஹிமான்ஷூ.

2019-2020 ன் முதல் காலாண்டு -1 (தொற்றுநோய்க்கு முன்) மொத்த நிலையான மூலதன உருவாக்கம் (GFCF) ரூ. 12.3 லட்சம் கோடி. இது 2021-22 காலாண்டில் ரூ. 10.2 லட்சம் கோடியாக குறைந்தது - முதலீடுகளில் 2.1 லட்சம் கோடி சரிவு ஏற்பட்டுள்ளது, பல 'நிதித்தொகுப்புகளுக்கு' பின்னும் பெருநிறுவன வரி குறைப்புகள் இருந்தபோதிலும், முதலீடுகள் குறைந்துள்ளதாக மேற்கு வங்க நிதியமைச்சர் அமித் மித்ரா குறிப்பிட்டுள்ளார். 2021-22 முதல் காலாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56 விழுக்காடாக உள்ள தனியார் நுகர்வு, 2019-2020 தொற்றுநோய்க்கு முந்தைய நிலையை விட 12 விழுக்காடு சரிவடைந்துள்ளது.2021-22 ல் இதுவரை தனியார் நுகர்வு 2017-18ன் தனியார் நுகர்வுக்கு கிட்டத்தட்ட சமநிலையில் பரிதாபத்திற்குரிய நிலையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மத்திய வங்கி, இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் தரவுகளின் படி ஆகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் நம்பிக்கை கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

தலைமைக் கணக்காயர் (CGA) வெளியிட்ட நடப்பு ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான மத்திய அரசின் நிதித் தரவு பகுப்பாய்வின் படி

1. தொற்றுநோய் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், முதல் நான்கு மாதங்களில் அதிக வருவாய் வளர்ச்சி இருந்துள்ளது. முதல் நான்கு மாதங்களில் நிதிநிலை அறிக்கையில் மதிப்பிடப்பட்டதில் 37.4 விழுக்காடு வருவாயையும், 34.2 விழுக்காடு வரி வருவாயையும் மத்திய அரசு பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது 194 விழுக்காடு உயர்வையும், 2019-20ன் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடும் போது 74 விழுக்காடு உயர்வையும் குறிப்பிடுகிறது.

2. செலவு செய்வதிலும், கடன் பெறுவதிலும் அரசாங்கம் எச்சரிக்கையாக உள்ளது. முதல் நான்கு

மாதங்களில் நிதிநிலை அறிக்கையில் மதிப்பீடு செய்ததை விட 29 விழுக்காடு குறைவாகவே செலவு செய்துள்ளது. முந்தைய ஆண்டுகளில் 34-35 விழுக்காடு வரை செலவு செய்துள்ளது. மத்திய அரசு நிதிநிலை அறிக்கையில் மதிப்பிடப்பட்டதில் 21 விழுக்காடே கடன் பெற்றுள்ளது. 2019-20ல் அரசு கடன் விகிதம் 77.8 விழுக்காடாகவும், 2020-21ல் 103 விழுக்காடாகவும் இருந்துள்ளது.

நிதிப் பற்றாக்குறை முதல் நான்கு மாதங்களில் 21.3 விழுக்காடாக மிகக் குறைந்த அளவிலே இருந்துள்ளது. 2020-21ல் நிதிப்பற்றாக்குறை நிதிநிலையறிக்கையில் மதிப்பிடப்பட்டதில் 103 விழுக்காடாகவும், 2019-20ல் 77.8 விழுக்காடாகவும் இருந்துள்ளது.

இந்தப் பகுப்பாய்வு எதைக் குறிப்பிடுகிறது என்றால் மத்திய அரசு இந்த அதிக வருவாயை பயன்படுத்தியும், கூடுதலாக கடன் பெற்றும், முறையாக செலவு செய்திருந்தால், பொதுத்துறை முதலீடுகளை அதிகரித்திருந்தால் மக்களின் நுகர்வும், நிகர வேண்டல் பற்றாக்குறையும் மீட்கப்பட்டு பொருளாதாரம் மீண்டெழப் பயன்பட்டிருக்கும்

செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற சரக்கு சேவை வரி அவையின் 45வது கூட்டத்தில் பெட்ரோல், டீசலை சரக்கு சேவை அமைப்புக்குள் கொண்டுவர இயலாது எனவும் கூடுதல் கட்டணம் மூலம் பெரும் சரக்கு சவை வரி இழப்பீட்டு நிதியை மாநில அரசுகளுக்கு 2022க்கு மேல் நீட்டிக்க முடியாது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது பெரும் ஏமாற்றத்தையே அளிக்கிறது. அதே நேரத்தில் ஆட்டோமொபைல்கள், சிகரெட்டுகள் மற்றும் பான் மசாலா போன்ற பொருட்களின் மீதான கூடுதல் கட்டணத்தை 2026 இறுதி வரை நீட்டிக்க வேண்டும் என்று நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். சரக்கு சேவை வரி அமைப்பால் மாநிலங்களின் வரி வருவாயில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும்,கோவிட் தொற்று தாக்கத்தை சரியாக சமாளிப்பதற்கும் கூடுதல் செலவினங்களை மாநில அரசுகள் மேற்கொள்ளவேண்டிய தேவை உள்ளது. ஆனால் மாநிலங்களின் நிதி இறையாண்மையை ஒட்டச் சுரண்டிய பாஜக அரசு குறைந்தபட்சம் நிதி இழப்பீட்டை இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்குகூட முன்வராது மாநிலங்களை நட்டாற்றில் தவிக்க விட்டுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன், இந்தியா மையத்திலிருந்து நிர்வகிக்க

முடியாத அளவுக்கு பெரியது என்று அதிகாரப் பரவலாக்கலின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். அதிக அதிகாரம் அரசுக்கு வழங்கப்படுவதே ஜனநாயகத்தை வலுப்படுத்தும். ஜனநாயகம் செயல்படும் போது கள்ளக்கூட்டு முதலாளித்துவத்தின் பலன்கள் ஒரு சிலருக்கு மட்டுமே போய் சேருவதைத் தடுக்கமுடியும்.வங்கிகள் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். ராஜன் சுகாதாரம், கல்வி செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளது அவை அரசால் சரியாக கவனம் செலுத்துவதில்லை என்றும் விமர்சித்துள்ளார்.

பங்குவிலக்கலின் மூலம் பொதுத்துறை நிறுவனங்களின் வருவாயை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும், பங்குவிலக்கல் செயல்முறை பொதுத்துறை நிறுவனங்களின் (PSUs) வருவாயை அதிகரிக்கவும் வேலைவாய்ப்பை உருவாக்கவும் உதவும் என்று துணை நிதியமைச்சர் பகவத் கே காரத் தெரிவித்துள்ளார். பொதுத்துறை நிறுவனங்கள் நாட்டில் 14 லட்சம் மக்களுக்கு வேலை வழங்குகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது எவ்வளவு முன்னுக்குப் பின் முரணான கருத்து. பொதுச் சொத்துக்களை தனியாருக்கு அடிமட்ட விலைக்கு விற்பதை வருவாய் பெற்றுத்தரும் செயல்முறையாக எப்படிக் குறிப்பிடமுடியும்.பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்தினால் வேலைவாய்ப்புகள் குறைந்துவிடும், அதில் வேலையிலிருந்தோரின் சமூகப் பாதுகாப்பு அச்சுறுத்தப்படும்.பங்கு விலக்கலின் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்கமுடியும் என்பது கடைந்தெடுத்த மடத்தனத்தின் உச்சக்கட்டமே. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் செயலாளர் தருண் கபூரும் இதே போன்ற கருத்துக்களை தெரிவித்துள்ளார்.நாட்டின் வளர்ச்சிக்கு பொதுத்துறை நிறுவனங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன, தொடர்ந்து அவை அதைச் செய்யும் என்று கூறுகிறார் தருண் கபூர்.

பொதுத்துறை வங்கிகளிடமிருந்து பெறும் பெருநிறுவனங்களின் கடன் தேவை குறைந்துள்ளது. கோவிட்19 ஆல் ஏற்பட்ட நிச்சயமற்ற சூழலில் நிறுவனங்கள் விரிவாக்க செயல்பாடுகளில் ஈடுபடுவதை விடுத்து கடனற்று இருப்பதற்கே முக்கியத்துவம் அளித்துள்ளன. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் (SBI) உள்நாட்டு பெருநிறுவனக் கடன்கள் ஜூன் 2021 காலாண்டில் 2.2 விழுக்காடு குறைந்து ரூ .7.9 லட்சம் கோடியாக உள்ளது, இது கடந்த ஆண்டு இதே காலாண்டில் ரூ .8.1 லட்சம் கோடியாக இருந்துள்ளது. கடந்த காலாண்டில் இந்தியன் வங்கியில் பெருநிறுவனக் கடன்கள் 3 விழுக்காடு குறைந்துள்ளது. பஞ்சாப் நேஷனல் வங்கியில்

பெருநிறுவனக் கடன்கள் 0.6 விழுக்காடு சரிவடைந்துள்ளன.

கடந்த ஆண்டு கோவிட் பொது முடக்கத்தால் சரிவடைந்த தனியார் நிறுவனங்களின் மூலதன முதலீடுகளில் நடப்பு நிதியாண்டிலும் சரிவு ஏற்படலாம் என மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது. கடந்த ஆண்டுகளில் வங்கிகள்/ நிதிநிறுவனங்களால் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட கடன் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட தரவுகளின் படி 2020-21-ல் 94227 கோடி ரூபாயில் இருந்து 2021-22-ல் 68469 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளதாகவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து நிதியுதவிகளையும் ஒன்றாகக் கருத்தில் கொண்டால், 2020-21-ல் ரூ .1,13171 கோடி ரூபாயாக இருந்த இவற்றின் மதிப்பு 2021-22-ல் ரூ .1,07535 கோடி ரூபாயாக உள்ளது என்றும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) தரவுகளின்படி, இந்திய நிறுவனங்கள் பத்திர சந்தையில் இருந்து மொத்தம் 81.8 லட்சம் கோடி ரூபாய் திரட்டியுள்ளன. ஆகஸ்ட் மாதத்திற்குள் பங்குச் சந்தையில் இருந்து கிட்டத்தட்ட 1 லட்சம் கோடி ரூபாய் நிதி திரட்டப்பட்டுள்ளது. வங்கியல்லாத மூலங்களிலிருந்து கடன் பெறும் போக்கு சென்ற ஆண்டு அதிகரித்துள்ளது. இந்த ஆண்டும் இதே நிலை தொடரும் போக்கு காணப்படுகிறது (livemint).

2021ஆம் நிதியாண்டில், தனியார் துறை நிறுவனங்களின் வைப்புத்தொகை 26.5 விழுக்காடு அதிகரித்துள்ளது. மொத்த வங்கி வைப்புத்தொகையில் தனியார் துறை நிறுவனங்களின் பங்கு 2020ல் 11.3 விழுக்காட்டிலிருந்து 2021 இல் 12.7 விழுக்காடாக அதிகரித்துள்ளது.உண்மையில், வங்கி அமைப்பின் வருடாந்திர வைப்புத்தொகையில் வளர்ச்சி இந்த ஆண்டின் தொடக்கத்தில் சுமார் 10 விழுக்காடாக இருந்தது ஆகஸ்ட் மாதத்தில் 8.62 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

தனியார் வங்கிகள் வங்கிகளுக்கான முன்னுரிமைக் கடன் நெறிமுறைகளை சரியாக பின்பற்றுவதில்லை.வங்கிகள் அவற்றின் மொத்த நிகரக் கடன் தொகையில் 40 விழுக்காடு முன்னுரிமைத் துறைகளுக்கு அளிக்கவேண்டும், அதில் 7.5 விழுக்காடு சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு அளிக்கவேண்டும் என்று மத்திய வங்கி நெறிமுறை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் பெரும்பாலான வங்கிகள் இதில் 25 விழுக்காட்டிற்கு மேல் சிறு, குறு நடுத்தர

நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில்லை என்பதே உண்மை நிலவரம்.குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கான வரையறையில் சமீபத்தில் செய்யப்பட்ட மாற்றங்களால் 90 விழுக்காட்டுக்கும் மேற்பட்ட தொழில் அலகுகள் குறுந்தொழில்கள் பிரிவில் வருகின்றன.இதனால் முதன்மைத் துறை கடன் நெறிமுறை மேலும் நீர்த்துப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாறிவரும் பொருளாதார சூழலை சமாளிக்க பாரத ஸ்டேட் வங்கியை போல 4 வங்கிகள் இந்தியாவுக்கு தேவை. பொருளாதார மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையிலான பணப்புழக்கத்துக்கு இது அவசியமாகும் என நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கருத்து தெரிவித்துள்ளார். சில கிராமப் பகுதிகளில் வங்கிகளின் சேவை போதுமான அளவுக்கு இல்லை என்பதே யதார்த்தமான நிலையாக உள்ளது. இப்பகுதிகளில் வங்கிக் கிளைகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு எந்த ஒரு பகுதியிலும் வங்கிக் கிளைகள் இல்லை என்ற நிலை உருவாக வேண்டும் என்றும் கூறியுள்ளார். பெரிய வங்கிகளால் மட்டும் தான் கிராமங்களில் கிளைகள் ஏற்படுத்த முடியுமா என்ன?. உண்மை நிலவரம் இதற்கு நேரெதிராக அல்லவா உள்ளது. பெரிய வங்கிகள் கிராமப்புறங்களை விலக்கி நகர்ப்புறங்களுக்கே முன்னுரிமை அளிக்கும் என்பது தானே உண்மை. நிதியமைச்சர் கூறியதற்கு என்ன பொருள்? வங்கிகளில் எஞ்சியிருக்கும் பொதுத்துறை பங்குகளையும் தனியார்மயப்படுத்தவேண்டும், வங்கிகளை இணைத்து பெரும் வங்கியாக்கி கிராமங்களில் ஏற்கெனவே இயங்கிவரும் வங்கிக்கிளைகளையும் மூடவேண்டும் என்று உட்பொருள் கற்பிக்கிறாரா எனத் தெரியவில்லை. ஏனென்றால் பெரிய, சிறந்த, திறன் மிக்க ஆகிய சொல்லாடல்கள் தனியார்துறையை குறிக்கும் பொருளிலே பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் ஒரு சராசரி விவசாயக் குடும்பம் 2018-2019 ஆம் ஆண்டில் மாதம் ரூ. 10,218 ஈட்டியதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகத்தின் தரவுகளின் மூலம் தெரியவந்துள்ளது. 2012-2013ல் ஒரு மாதத்திற்கு மாத வருவாய் ரூ.6,426 ஆக இருந்துள்ளது. இது ஆறு ஆண்டுகளில் சுமார் 60 விழுக்காடு பெயரளவிலான வருவாய் வளர்ச்சியைக் குறிக்கிறது. இருப்பினும், கிராமப்புற நுகர்வோர் விலைக் குறியீட்டைப் பயன்படுத்தி பணவீக்கத்தை சரிசெய்த பிறகு, விவசாயிகளின் வருவாய் இந்த காலகட்டத்தில் உண்மையாக 21 விழுக்காடு மட்டுமே வளர்ந்துள்ளது. . இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (பொருளாதாரத்தின்

உண்மையான அளவு) அதே காலகட்டத்தில் 52 விழுக்காடு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகத்தின் 2019 கணக்கெடுப்பின் படி சராசரியாக ஒரு விவசாய குடும்பத்தின் கடன் சுமை ரூ.74,121ஆக இருந்துள்ளது. இப்போது கோவிட் தொற்றுத் தாக்கத்திற்கு பின் இந்த கடன் அளவு இன்னும் அதிகரித்திருப்பதற்கான வாய்ப்புகளே உள்ளன.வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அரசு சார்ந்த நிதி அமைப்புகளில் பெற்ற கடன் தொகை 69.2 விழுக்காடாகவும், தனியாரிடம் பெற்ற கடன் 20 விழுக்காடாகவும், மொத்த கடன் தொகையில் விவசாயத்துக்காக பெறப்பட்டவை 57.5 விழுக்காடாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

<u>பணவீக்கம்:</u>

மொத்த விலை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 11.39 விழுக்காடாக உயர்ந்துள்ளது, எரிபொருள், ஆற்றலின் விலைவாசி 26.09 விழுக்காடு உயர்ந்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்கத்தின் அளவு 5.30 விழுக்காடு அதிகரித்துள்ளது, உணவுப் பொருட்களின் விலைவாசி 3.11 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 11.68 விழுக்காடு குறைந்துள்ளது. பழங்களின் விலைவாசி 6.69 விழுக்காடு உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 8.81 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை 16.33 விழுக்காடு உயர்ந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 33.00 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன்,இறைச்சியின் விலைவாசி 9.19 விழுக்காடு உயர்ந்துள்ளது.

<u>ஜூலை மாதத்தில் தொழில்துறை வளர்ச்சி:</u>

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி ஜூலை மாதத்தில் உற்பத்தி 11.5 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறை, செய்பொருளாக்கத் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றில் உற்பத்தி முறையே 19.5, 10.5, 11.1 விழுக்காடு உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் பொதுமுடக்கத்தின் தாக்கத்தால் உற்பத்தி சரிவடைந்ததன் அடிப்படையில் இந்த உயர்வை புரிந்துகொள்ளவேண்டியது அவசியம். முதன்மை பொருட்கள், மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், உற்பத்தி அளவுகள் முறையே 12.4, 29.5, 14.1, 11.6 விழுக்காடு உயர்ந்துள்ளன. உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 1.8 விழுக்காடு

குறைந்துள்ளது. நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 20.2 விழுக்காடு குறைந்துள்ளது.

<u>ஆகஸ்டில் தொழில்துறை வளர்ச்சி:</u>

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கிய தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக்குறியீடு ஆகஸ்டில் 11.6 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாத உற்பத்தி அளவோடு ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 20.6 விழுக்காடு அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 2.3 விழுக்காடு குறைந்துள்ளது, பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருட்களின் உற்பத்தி 9.1 விழுக்காடு அதிகரித்துள்ளது. உர உற்பத்தி 3.1 விழுக்காடு குறைந்துள்ளது. இயற்கை எரிவாயு உற்பத்தி 20.6 விழுக்காடும், எ்.்கு உற்பத்தி 5.1 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 36.3 விழுக்காடும், மின்சார உற்பத்தி 15.3 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

உலக வங்கி எளிதாக வர்த்தகம் செய்வது தொடர்பான அறிக்கையை வெளியிடுவதை நிறுத்தியுள்ளது, நாடுகள் எந்தளவிற்கு நிறுவனங்களுக்கு சாதகமாக செயல்படுகின்றன என்பது இந்த அறிக்கையில் மதிப்பீடு செய்யப்பட்டது. உலகெங்கிலும் உள்ள பல நிறுவனங்களும் முதலீட்டாளர்களும் இந்த அறிக்கைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்தனர். உலக வங்கியின் "எளிதாக வர்த்தகம் செய்வது தொடர்பான" அறிக்கையைப் பயன்படுத்தி பணத்தை எங்கு முதலீடு செய்வது, உற்பத்தி ஆலைகளை எங்கு திறப்பது அல்லது பொருட்களை எங்கு விற்பனை செய்வது என்பது தொடர்பாக முடிவு செய்யப்பட்டது.2002ல், உலக வங்கி இந்த அறிக்கையை அறிமுகப்படுத்தியது, அதன் வருடாந்திர தரவரிசையில் எந்தெந்த நாடுகள் வர்த்தக நிறுவனங்களுக்கு சாதகமான தாராளமயக் கொள்கைகளை செயல்படுத்துகின்றன என்பது மதிப்பீடு செய்யப்பட்டது. அரசமைப்புகள் உள்நாட்டு நிறுவனங்களை எப்படி நடத்துகின்றன என்பது குறித்தே இதில் மதிப்பிடப்படுகிறது என்ற போதிலும், இந்தத் தரவரிசை பெரும்பாலும் ஊடகங்கள் மற்றும் முதலீட்டாளர்களால், தேச அரசுகள் அந்நிய முதலீடுகளுக்கு எவ்வளவு சாதகமாக இருக்கின்றன என்பதற்கான அடிப்படையாகவே கருதப்படுகிறது.

இந்த அறிக்கையில் வெளிப்படைத் தன்மை இல்லை என்று 2018ல் அப்போதைய உலக வங்கியின் தலைமை பொருளாதார நிபுணர் பால் ரோமர், பதவி விலகினார். தென் அமெரிக்க நாடான சிலியில் சோசலிசவாதி மைக்கேல் பேச்லெட் அதிபரான பிறகு சிலி தரவரிசையில் கீழே

தள்ளப்பட்டது, பழமைவாத கட்சியை சேர்ந்த செபஸ்டியன் பினேராவின் ஆட்சியில் சிலிக்கு உயர்ந்த தரம் அளிக்கப்பட்டது, மீண்டும் மைக்கேல் பேச்லெட் ஆட்சிக்கு வந்த போது மீண்டும் சிலி மீண்டும் கீழே தள்ளப்பட்டது இந்த நேரங்களில் எந்தக் கொள்கை மாற்றமும் செய்யப்படாத போதும் தரவரிசையில் ஏற்ற இறக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டது என்று உலக மேம்பாட்டு மையம் குறிப்பிடுகிறது.

உலக மேம்பாட்டு மையத்தைச் சேர்ந்த ஜஸ்டின் சாண்ட்பர் கூறுகிறார் உலகவங்கியின் இந்தத் தரவரிசை எப்போதும் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீட்டிற்கு எதிரான போக்குடையதாகவும், அரசு செலவினம், தொழிலாளர், நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவற்றை சரியாக மதிப்பிடுவதில்லை என்றும், ஒழுங்குமுறைக்கு, வரிவிதிப்பு ஆகியவற்றுக்கு எதிரான தனியார் ஆதரவு போக்கைக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலக வங்கியின் எளிதாக வர்த்தகம் செய்வது தொடர்பான அறிக்கை வெளிப்படைத்தன்மை இல்லாது அழுத்தத்திற்கு அடிபணிந்து தரவுகளை மாற்றி வெளியிடுகிறது என்று குற்றம் சாட்டப்பட்டது. 2018 ,2020 பதிப்பு அறிக்கைகளின் மீதான உள்ளக தணிக்கையில் முறைகேடுகள் கண்டறியப்பட்டதை அடுத்து, இந்த அறிக்கையை வெளியிடுவதை நிறுத்த உலக வங்கி குழு முடிவு செய்துள்ளது. விசாரணையின் படி, அழுத்தத்தின் காரணமாக சீனாவிற்கு உயர்ந்த தரமதிப்பீடு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.உலகவங்கியின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது ஏனென்றால் தேச அரசுகளின் பொருளாதார சுதந்திரத்தை ஒடுக்கும் கருவியாகவே இவ்வறிக்கை இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அரசுகள் உயர்ந்த தரமதிப்பீட்டை பெற தாராளமய சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு நிர்பந்திக்கப்பட்டன.இதனால் பொது சமூகத் துறைகள் புறக்கணிக்கப்பட்டன, அரசு செலவினங்கள் குறைக்கப்பட்டன.மக்கள் சார் பொருளாதார நடவடிக்கைகளை செயல்படுத்தவிடாமல் தடுக்கும் கருவியாகவே இந்த அறிக்கை இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் மேற்கொண்ட கணக்கெடுப்பின் தரவுகளில் 10 விழுக்காடு பணக்காரர்களிடம் இந்தியாவின் 50 விழுக்காடு சொத்துகள் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. நகர்ப்புற பகுதிகளில் 55.7 விழுக்காடு சொத்துகள் 10 விழுக்காடு

பணக்காரர்களிடமும், கிராமப்பகுதிகளில் 50.8 விழுக்காடு சொத்துக்கள் 10 விழுக்காடு பணக்காரர்களிடமும் உள்ளது. மிகவும் கீழ்நிலையில் உள்ள ஏழைகளிடம் ஒட்டுமொத்த சொத்துகளில் 5 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கின்றது.நாட்டில் கிராமப் பகுதிகளில் ஒட்டுமொத்தமாக உள்ள ரூ.238.1 லட்சம் கோடி சொத்துகளில் 10 விழுக்காடு பணக்காரர்களிடம் ரூ.132.5 லட்சம் கோடி சொத்துகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. சொத்துவரியை மீண்டும் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தையே இத்தரவுகள் தெரிவிக்கின்றன.

சுவிட்சர்லாந்தில் இருந்து இந்தியா பாடம் கற்கவேண்டும். மூலதனத்திற்கு வரி விதிப்பது மட்டுமே வளர்ச்சியை அதிகரிக்கவும் சமத்துவமின்மையைக் குறைக்கவும் விவேகமான வழியாகும் என்பதை அங்கீகரித்து பொது வாக்கெடுப்பு சுவிட்சர்லாந்தில் நடத்தப்பட்டது.ஊதியங்களின் மீதான வரியைக் குறைக்கவும், மூலதனத்தை நியாயமான வரிக்குட்படுத்தவும் 99 விழுக்காட்டினரால் ஏற்படுத்தப்படும் முன்முயற்சி என்று இந்த முன்னெடுப்பு சோசலிச இளைஞர் குழுவால் தொடங்கப்பட்டது, இது ஒரு விழுக்காடு பெரும் பணக்காரர்களின் மூலதன வருவாய் மீதான வரியை 150 விழுக்காடு அதிகரித்து அதில் கிடைக்கும் வருவாயை மீதமுள்ள மக்களுக்கு மறுபங்கீடு செய்யவேண்டும் என்ற அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது.இது செயல்படுத்தப்பட்டால் சுவிட்சர்லாந்து அரசு 500 முதல் 1000 கோடி ஃபிராங்குகள்(சுவிஸ் நாணயம்) கூடுதல் வருவாயைப் பெறமுடியும்.ஆனால், அரசு உட்பட அரசியல் கட்சிகளும், வர்த்தக வட்டாரங்களும் இந்த முயற்சியை நிராகரிக்குமாறு வாக்காளர்களை வலியுறுத்தி எதிர் பரப்புரை செய்துள்ளன. செப்டம்பர் 26ல் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பொதுவாக்கெடுப்பில் சுவிட்சர்லாந்து வாக்காளர்களில் 64.10 விழுக்காட்டினர் மூலதனத்தின் மீது கூடுதல் வரி விதிப்பதை நிராகரித்து வாக்களித்துள்ளனர். ஆனபோதும் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டும் நல்லதொரு முன்முயற்சியாகவே இதைக் குறிப்பிடவேண்டும். பொது வாக்கெடுப்பு உண்மையான ஜனநாயகத்திற்கு வழிகோலுவதற்கான அருமையான கருவிகளில் ஒன்று நம் நாட்டிலும் அதை பெருவாரியாக பயன்படுத்துவதற்கான வழிவகையை ஏற்படுத்தவேண்டும்.

# பணவீக்கம்:

சமந்தா

பணவீக்கம் என்ற சொல்லை நாம் கேள்விப்பட்டிருப்போம். பொருளாதார செய்திகளில் பணவீக்கம் என்ற சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுவதைக் காண்கிறோம். கடந்த இரண்டு வருடங்களாக இந்தியாவில் பண வீக்கத்தின் அளவு அதிகரித்துள்ளது. பண வீக்கத்தை பற்றி முழுமையாக புரிந்து கொள்ளவேண்டியதன் அவசியத்தையே இச்சூழல் கோருகிறது இல்லையா? ஆகவே பணவீக்கம் என்றால் என்ன, என்பதைத் தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

சரக்குகள், சேவைகளின் விலையில் ஏற்படும் உயர்வே பண வீக்கம் எனப்படுகிறது.அதாவது பணத்தின் வாங்கும் திறனில் ஏற்படும் வீழ்ச்சியே பணவீக்கம் ஆகும்.மேற்கூறிய இரண்டையும் ஒன்றிணைத்துப் புரிந்துகொள்வோமானால் பொருட்களின் மதிப்பு அதிகரித்து, பணத்தின் மதிப்பு குறைவதே பணவீக்கம் எனப்படுகிறது. பணவீக்கம் அதிகரிக்கும் போது பணத்தின் வாங்கும் திறன் குறைகிறது.

நாம் பொதுவாகப் பயன்படுத்தும் ஒரு பொருளின் விலையில் ஏற்படும் உயர்வுக்கு இணையாக மற்றொரு நுகர்வுப் பொருளின் விலையில் தாழ்வு ஏற்படுமானால் அது நம் வாங்கும் திறனிலோ, நுகர்விலோ பெரியத் தாக்கத்தை ஏற்படுத்தாது. பொதுவாக பெருவாரியான பொருள்களின் விலைவாசியில் ஏற்படும் உயர்வே பணவீக்கம் எனப்படுகிறது.ஓரிரு பொருட்களின் விலைகளில் ஏற்படும் உயர்வை பண வீக்கம் என்று குறிப்பிட முடியாது. பணவீக்கம் பலதரப்பட்ட பொருட்கள், சேவைகளின் விலை மாற்றங்களின் ஒட்டுமொத்த தாக்கத்தை அளவிடுகிறது. ஒரு பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைவாசி நிலவரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குறியீடாக பணவீக்கம் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு பொருளின் விலை நேற்று அதிகரித்திருந்தது, இன்று வீழ்ச்சியடைந்துள்ளது என்றால் அதை பணவீக்கம் எனக் குறிப்பிடமுடியாது. ஒரு பொருளின் விலை ஒரே நாளிலே பல ஏற்ற இறக்கங்களுக்கு உட்படலாம். உதாரணமாக பங்குச் சந்தையில் ஒரு பங்கின் விலை ஒரு நாளைக்குள் பல்வேறு முறை ஏறி இறங்குகிறது. அதை பணவீக்கம் என்ற வரையறைக்குள் குறிப்பிடமுடியாது குறுகிய கால ஏற்ற இறக்கங்கள் என்றே குறிப்பிடமுடியும்.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில், சில பொருட்களின் விலைகள் உயர்ந்திருக்கலாம், சில பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்திருக்கலாம். இதன் விளைவாக, ஒட்டுமொத்தமாக, இந்த விலைகளின் சராசரி மாறாமல் இருக்கலாம் அல்லது குறையலாம். இத்தகைய நிகழ்வால் பணவீக்கம் அதிகரிக்காது. பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்படும் நிலையான உயர்வு

அல்லது பொது சராசரி விலைகளின் தொடர்ச்சியான உயர்வுக்கான போக்கு பணவீக்கம் எனப்படுகிறது.

பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டில் ஒரு சிறு பங்கே வகிக்கும் பொருட்களின் விலை உயர்வும் பணவீக்கத்தை அதிகரிக்காது. அதாவது, அனைத்து பொருட்களின் சராசரி விலை மட்டத்தையும் பாதிக்காத அளவிற்கு அத்தகைய பொருட்களின் விலை உயர்வின் விளைவு மிகச் சிறியதாக இருக்கும். ஆகவே ஒரு பொருளின் விலை உயர்வையோ, ஒரு சிறுங்குழுமப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் உயர்வையோ பணவீக்கம் குறிப்பிடாது. பொதுவாக பெருவாரியான பொருள்களின் விலைவாசியில் ஏற்படும் உயர்வே பணவீக்கம் எனப்படுகிறது பணவீக்கம் என்பது ஒரு ஒரு பெரும பொருளாதார நிகழ்வாக உள்ளது.

பணவீக்கம் நம் அன்றாட வாழ்க்கையில் எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது?.பொருட்களின் விலைகள் உயரும் போது நாணயம் மதிப்பை இழப்பதால் ஓரலகு நாணயத்தைக் கொண்டு முன்னர் வாங்கியதைக் காட்டிலும் குறைவான பொருட்கள் அல்லது சேவைகளையே வாங்க முடிகிறது.

உதாரணமாக ஒரு கிலோ அரிசியின் விலை 20 ரூபாய் என்றும், ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு 5கிலோ அரிசி தேவைப்படுகிறது எனவும் வைத்துக் கொள்வோம். அப்படி என்றால் அவர் ஒரு மாதத்திற்கு அரிசி நுகர்விற்காக 100 ரூபாய் செலவு செய்கிறார். ஆனால் விலைவாசி உயர்வால் அரிசியின் விலை 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயரும் எனில் அவர் 100 ரூபாயைக் கொண்டு 4 கிலோ அரிசியை மட்டுமே வாங்கமுடியும், முன்பு போல் 5 கிலோ அரிசியை வாங்கமுடியாது. ஐந்து கிலோ அரிசியை வாங்கவேண்டுமெனில் அவருக்கு 125 ரூபாய் தேவைப்படும் அதாவது கூடுதலாக 25 ரூபாய் தேவைப்படும்.

மேற்கூறிய எடுத்துக்காட்டில் அரிசியை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம். ஆனால் அன்றாட வாழ்வில் நாம் வெறும் அரிசியை மட்டும் நுகர்வதில்லை பல்வேறு பொருட்களையும், சேவைகளையும் நுகர்கிறோம்.இங்கே நுகர்வு என்பதை பயன்பாடு என்ற பொருளில் குறிப்பிடுகிறோம். நுகர்வு என்பது பொதுவாக பல்வேறு பொருட்களையும், சேவைகளையும் பயன்படுத்துவதையே குறிப்பிடுகிறது.

பொதுவாக எளிய மக்களின் வருவாய் நிலையானததாகவும், மாறாததாகவும் இருக்கிறது. ஊதிய உயர்வு அனைவருக்கும் கிடைப்பதில்லை, அப்படிக் கிடைத்தாலும் ஒரு ஆண்டுக்கோ அல்லது பல ஆண்டுகளுக்கோ ஒரு முறையோ அளிக்கப்படுகிறது. ஆனால் பணவீக்கம்/விலைவாசி உயர்வு என்பது அவ்வாறு நிலையானதாக இல்லை எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றத்திற்கு உட்படலாம். ஒரு நபரின் அல்லது குடும்பத்தின் வருவாய் நிலையாக இருக்கும் போது விலைவாசியில் ஏற்படும் உயர்வு, பணவீக்கத்தில் ஏற்படும் அதிகரிப்பு அவர்களின் வருவாயின் உண்மையான மதிப்பைக் குறைக்கிறது. பணவீக்கம் நிலையான வருவாய் பெறுபவர்களின் வாங்கும் திறனை குறைக்கிறது.இதனால் பணவீக்கத்தில் ஏற்படும் உயர்வு எளிய மக்களின் வாங்கும் திறனையும், அதன் மூலம் நுகர்வுத்திறனையும் குறைப்பதன் மூலம் அவர்களை கடுமையாக பாதிக்கிறது.

பணவீக்கம் சமூகத்தின் பல்வேறு பிரிவினரை வெவ்வேறு விதத்தில் பாதிக்கிறது. தொழிலாளர்கள், தினக்கூலி பெரும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் பணவீக்கத்தால் அரிக்கப்படுகிறது. ஆனால் மூலதனமும், நிறுவனங்களும் லாபம் குறைந்துவிடும் என்பதால் விலைவாசிக்குறைவையோ, குறைந்த பணவீக்கத்தையோ விரும்புவதில்லை. விலை உயர்வு நிறுவனங்களின் உற்பத்தியையும், லாபத்தையும் அதிகரிப்பதால் பணவீக்கம் நிறுவனங்களுக்கு உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கும் இலாபத்தை அதிகரிப்பதற்கும் உதவுகிறது.
உயர்ந்த பணவீக்கம் நிறுவனங்களின் உற்பத்தி செலவுகளை அதிகரிக்கிறது என்பதால் மூலதனம்/நிறுவனங்கள் அதை விரும்புவதில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். அதே நேரத்தில் பணவாட்டத்தையும் நிறுவனங்கள் விரும்புவதில்லை. பொருட்களின் விலைவாசி குறைந்து வீழ்ச்சியடையும் போக்கு பணவாட்டம் எனப்படுகிறது. பொருளாதாரம் மந்த நிலையில் இருக்கும் போது இத்தகைய நிலை ஏற்படலாம். இது நிறுவனங்களின் வருவாய்களில் வீழ்ச்சியை

ஏற்படுத்துகிறது. மிதமான பணவீக்கமே முதலாளித்துவ பொருளாதார உற்பத்திமுறைக்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது.

ஏழை மற்றும் நிலையான வருவாய் ஈட்டுபவர்கள் தான் பணவீக்கத்தால் மோசமாக பாதிக்கப்படுகின்றனர். இந்திய மக்கள்தொகையில் பெரும்பான்மையானவர்கள் தினக்கூலி பெறும் தொழிலாளர்களாகவும், விவசாயக் கூலிகளாகவும் உள்ளனர். அவர்களிடம் எந்த சேமிப்பும் கிடையாது என்பதால் பணவீக்க உயர்வு அவர்களின் வாங்கும் திறனையும், நுகர்வையும் கடுமையாக பாதிக்கிறது. அரசு ஊழியர்கள் போன்ற அமைப்பு சார் ஊழியர்களின் ஊதியம் பணவீக்கத்தோடு இணைக்கப்பட்டு தகுந்த அகவிலைப்படி அளிக்கப்படுமானால் அவர்கள் பணவீக்கத்தால் பாதிக்கப்படமாட்டார்கள்.

நிலம் போன்ற கட்புலனாகும் சொத்துக்கள், சரக்கிருப்புகளை வைத்திருப்போரின் சொத்து மதிப்பை உயர்த்துவதால் பணவீக்கம் அவர்களுக்கு சாதகமாக அமையும். மறுபுறம், பண வடிவில் அதிக சேமிப்புகளை வைத்திருப்பவர்களின் உண்மையான மதிப்பை/வாங்கும் திறனை பணவீக்கம் குறைத்துவிடுகிறது. பணவீக்க உயர்வு கடன் அளிப்பவர்களுக்கு பாதகமாகவும், கடன் வாங்குபவர்களுக்கு சாதகமாகவும் அமையும், ஏனெனில் நிலுவை கடன்களின் மதிப்பை பணவீக்கம் குறைக்கிறது. வெளிநாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்கள் பண வீக்க உயர்வால் அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படும் ஆகையால் தேசங்களின் இறக்குமதி செலவினம் பணவீக்க உயர்வால் அதிகரிக்கும். பணவீக்கம் ஏழைகள், நிலையான வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாள வர்க்கத்தை சமுதாயத்தின் பிற பிரிவுகளை விட மிகவும் மோசமாக பாதிக்கிறது. மொத்தத்தில் பணவீக்கம் பணக்காரர்களுக்கு ஆதரவாக வருவாயை மறுபகிர்வு செய்கிறது.

பணவீக்கத்தால் ஏற்படும் செல்வ இழப்பை/ மதிப்பு இழப்பை, இழப்பைத் தடுக்க பல்வேறு வழிமுறைகள் செல்வந்தர்களாலும், முதலீட்டாளர்களாலும் கடைபிடிக்கப்படுகிறது. செல்வந்தர்கள் பணவீக்கத்திலிருந்து பாதுகாப்பு பெற தங்கள் பணத்தை பங்குச்சந்தைகளில் பங்குகளில் முதலீடு செய்கிறார்கள், கடன் பத்திரங்களில் முதலீடு செய்கின்றனர். நிலம் போன்ற விலையேற்றம் பெறும் அசையா சொத்துக்களில் முதலீடு செய்கின்றனர். நீண்ட

நெடுங்காலமாகவே தங்கத்தில் அதிக முதலீடு செய்வது பணவீக்கத்திலிருந்து பாதுகாப்பு பெறும் வழிமுறையாக அறிந்தேற்கப்பட்டுள்ளது. .

பணவீக்கத்தின் வகைகள்

பணவீக்கத்தை அதன் அளவின்/தீவிரத்தன்மையின் அடிப்படையில் மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவையாவன 1. மிதமான பணவீக்கம், 2. வேகமான பணவீக்கம் மற்றும் 3. உயர்பணவீக்கம்.

மிதமான பணவீக்கம்:

மிதமான பணவீக்கத்தின் போது பொது விலைவாசி நிலை மெதுவாக ஆனால் சீராக அதிகரிக்கும் போக்கு காணப்படுகிறது.பணவீக்கத்தின் அளவு 9 விழுக்காட்டிற்கும் குறைவான ஒற்றை இலக்க அளவில் உள்ளது.

வேகமான பணவீக்கம்:

பொது விலை மட்டத்தில் நிலையான, மிக அதிகமான அதிகரிப்பு வேகமான பணவீக்கம் என்று அழைக்கப்படுகிறது. பணவீக்கத்தின் அளவு விகிதம் இரண்டு இலக்கங்களாக (20 விழுக்காடு, 40 விழுக்காடு) மற்றும் சில சமயங்களில் மூன்று இலக்கங்கள் (100, 200 விழுக்காடு) வரை உயருகிறது.

உயர் பணவீக்கம்:

பணவீக்கத்தின் அளவு கட்டுக்கடங்காமல் பல இலக்கங்களுக்கு அதீதமாக அதிகரிப்பதே உயர் பணவீக்கம் எனப்படுகிறது.

ஏகாதிபத்திய நாடுகளின் நவீன தாராள ஒடுக்குமுறையால் அர்ஜெண்டினாவில் 20262.80 விழுக்காடாகவும், வெனிசுலாவில் 344509.50 விழுக்காடாகவும் உயர்ந்த பணவீக்கத்தை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

# பணவீக்கக் குறியீடுகள்:

சமந்தா

பணவீக்கத்தை சரியாக புரிந்துகொள்ள, பொருட்களின் விலைவாசி நிலையும், அதில் ஏற்படும் மாற்றமும் எவ்வாறு அளவிடப்படுகிறது என்பதை அறியவேண்டும்.

விலைவாசியும், அளவீடும்:

ஒரு பொருளை அல்லது சேவையை வாங்குவதற்கோ, விற்பதற்கோ தேவைப்படும் பணத்தையே அப்பொருளின் விலையாகக் குறிப்பிடுகிறோம். பொருட்களின் விலையில் ஏற்படும் மாற்றத்தை அளவிட விலைக் குறியீடு பயன்படுத்தப்படுகிறது. ஒரு நாட்டின் விலைவாசி நிலவரம் என்பது ஓரிரு பொருட்களின் விலைகளை மட்டும் குறிப்பிடுவதில்லை, மொத்தமாக பல்வேறு பொருட்கள்/சேவைகளின் விலைகளின் நிலவரத்தைக் குறிப்பிடுகிறது.

விலைக் குறியீடு:

விலைக் குறியீடு என்பது இரண்டு கால இடைவெளிகளில் பொருட்களின் விலையில் ஏற்படும் மாற்றத்தை அளவிடப் பயன்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் காணப்படும் விலை நிலையை அடிப்படையாகக் கொண்டு அதனுடன் ஒப்பிட்டு இந்த ஆண்டின் விலைக்குறியீடு கணக்கிடப்படுகிறது.அடிப்படையாக கொள்ளப்படும் ஆண்டின் விலை மதிப்பு 100ஆகக் கொண்டு இந்த ஆண்டின் விலையில் ஏற்படும் மாற்ற விகிதம் கணக்கிடப்படுகிறது.

விலைக் குறியீடு= 100* இந்த ஆண்டின் விலை/ அடிப்படை ஆண்டின் விலை

ஒரு கிலோ அரிசியின் விலை 2020ல் 20 ரூபாயாக இருந்தது 2021ல் 25 ரூபாயாக உயருமானால் அதற்கான விலைக் குறியீடு= 100*25/20 =125

இங்கே 125 விலைக்குறியீடு அரிசியின் விலை சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் 25 விழுக்காடு உயர்ந்துள்ளதைக் குறிப்பிடுகிறது.அதாவது சென்ற ஆண்டு செலவழித்ததை விட 25 விழுக்காடு கூடுதலாக பணம் இருந்தால் மட்டுமே அதே அளவு பொருளை வாங்கமுடியும்.

பொதுவான விலைக் குறியீட்டின் தலைகீழி அந்தக் குறிப்பிட்ட காலத்திற்கான பணத்தின் வாங்கும் திறனைக் குறிப்பிடுகிறது. மேலே கணக்கிடப்பட்ட விலைக்குறியீட்டின் தலைகீழி= 20/25*100 =80

விலைக் குறியீடு எண் 125 ஆக உயர்ந்தால், 20 ரூபாய் பணத்தைக் கொண்டு அடிப்படை

ஆண்டில் வாங்கியதில் 80 விழுக்காடு மட்டுமே வாங்கமுடியும் என்பதை இதன் மூலம் அறியலாம்.

அரசு, தனியார் அமைப்புகள் விலைக் குறியீட்டு எண்களை கணக்கிடுகின்றன. அவை வணிக மற்றும் பொருளாதார நிலைமைகளை வெளிப்படுத்தும் குறியீடுகளாக பயன்படுத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் தொகுப்பைப் பொறுத்து, பல வகையான விலைக் குறியீடுகள் கணக்கிடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

இரண்டு விலைக் குறியீடுகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன, நுகர்வோர் விலைக் குறியீடு (CPI-Consumer price index) மொத்த விலைக் குறியீடு (WPI- wholesale price index). ஒரு தேசத்தின் பணவீக்கம் முக்கியமாக இந்த இரண்டு குறியீடுகளால் அளவிடப்படுகிறது. இவை பொருளாதார நலனையும், பொருட்களின் விலைகளில் காணப்படும் நிலைத்தன்மையையும் அறிவதற்கான மிக முக்கியமான பொருளாதாரக் குறியீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில், விலை நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் நுகர்வோர் விலைக் குறியீட்டின் மூலமும் , மொத்த விலைக் குறியீட்டின் மூலம் அளவிடப்படுகின்றன. இந்த குறியீடுகள் முறையே சில்லறை மற்றும் மொத்த விலை நிலைகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுகின்றன.

நுகர்வோர் விலை குறியீடு:

இது சில்லறை பணவீக்கம் என்றும், வாழ்வாதார செலவு குறியீடு என்றும் அழைக்கப்படுகிறது. சில்லறை சந்தையின் விலை மாற்றம் அதாவது தினசரி வீட்டு உபயோகத்திற்காக வாங்கும் பொருட்கள், சேவைகளின் விலை மாற்றம் இதன் மூலம் கணக்கிடப்படுகிறது.இது பொதுவாக நுகர்வுப் பொருட்களின் விலைகளின் சராசரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது. இது மக்களின் வாழ்வாதார செலவினங்களை அறிந்துகொள்ள பயன்படுகிறது.

ஒரு தேசத்தின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்வாதாரச் செலவுகளை கணக்கிட்டு பணத்தின் வாங்கும் திறனில் ஏற்படும் மாற்றங்கள் இக்குறியீட்டின் மூலம் அளவிடப்படுகிறது. நுகர்வுப்

பொருட்களின் விலை உயரும் போது நுகர்வோர் விலைக் குறியீடு அதிகரிக்கிறது, அவற்றின் விலை குறையும் போது நுகர்வோர் விலைக் குறியீடும் குறைகிறது.

சராசரி குடும்பங்கள், தொழிலாளர்கள் போன்ற ஒத்த மக்கள் குழுவினரால் பொதுவாக நுகரப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் இக்குறியீட்டின் மூலம் அளவிடப்படுகிறது.

நுகர்வோர் விலைக் குறியீட்டைக் கணக்கிடுவதற்கான நுகர்வுக்கூடையின் பகுதிப்பொருட்கள் குடும்பங்களிடம் மேற்கொள்ளும் கணக்கெடுப்புகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதன் மூலம் வீடுகளில் வாங்கப்படும் பொருட்கள், தினசரி செலவுகள் குறித்து தரவுகள் பெறப்படுகிறது.அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் விலை பற்றிய தகவல்கள் நுகர்வோர் வாங்கும் பல்வேறு சில்லறைச்சந்தைகளிலிருந்து பெறப்படுகிறது.

இந்தியாவில் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அளவிடுவதற்கான சமீபத்தைய அடிப்படை ஆண்டு 2011-12 ஆகும். 2011-12ல் தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் மேற்கொண்ட 68வது சுற்றின் நுகர்வோர் செலவின தரவுகளின் அடிப்படையில் நுகர்வுக்கூடையின் பொருட்களும், அளவுகளும் தேர்ந்தெடுப்பட்டுள்ளன.2011-12ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நுகர்வுக்கூடை 299 பொருட்களையும், சேவைகளையும் கொண்டுள்ளது.

நுகர்வோர் விலைக் குறியீட்டைக் கணக்கிடுவதற்கான நுகர்வுக் கூடையின் பகுதிப் பொருட்கள் பின்வருமாறு: 1) உணவு, பானங்கள் 2) புகையிலை, போதைப்பொருட்கள் 3) ஆடை, காலணி 4) வீட்டு வாடகை 5) எரிபொருள், ஆற்றல் 6) இதரவை.

இந்த 6 பிரிவுகளிலும் ஒரு சராசரி குடும்பத்தால் நுகரப்படும் விகிதாசார அளவில் விலைக் குறியீடு கட்டமைக்கப்பட்டுள்ளது.

6 பிரிவுகளில் ஒவ்வொன்றும் பல துணை பிரிவுகளைக் கொண்டுள்ளன.

'உணவு' என்பதன் உள்ளடக்கமாக தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய்கள், இறைச்சி, மீன், முட்டை, மசாலா, காய்கறிகள், பழங்கள், தேநீர், காபி போன்ற பானங்கள், ஆகியவை உள்ளன.

இதரவை என்பதன் உள்ளடக்கமாக வீட்டு உபயோகப் பொருட்கள், கருவிகள், மருத்துவச் சேவை, போக்குவரத்து ஆகியவை அடங்கும். இந்த மாறாத நுகர்வுக்கூடையின் விலை 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டில் குறிப்பிட்ட மாதத்தில் எவ்வளவு மாற்றத்திற்குட்பட்டுள்ளது என்பதே இக்குறியீட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.

லாஸ்பியர்ஸ் சூத்திரத்தைப் பயன்படுத்தி நுகர்வோர் குறியீடும், மொத்த விலைக் குறியீடும் கணக்கிடப்படுகிறது.

லாஸ்பியர்ஸ் சூத்திரம்

மொத்த எடை X புதியவிலை / பழையவிலை X 100 X மொத்த எடை

அல்லது

எளிதாக விதமாகக் குறிப்பிடவேண்டும் என்றால்

நுகர்வோர் விலைக் குறியீடு = நுகர்வுக் கூடையின் தற்போதைய விலை / அடிப்படை ஆண்டில் நுகர்வுக் கூடையின் விலை x 100

இந்தியாவின் புள்ளியியல், திட்ட அமலாக்க அமைச்சகத்தின் மத்திய புள்ளியியல் அலுவலகம் நுகர்வோர் விலைக்குறியீட்டை கிராமப்புறங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும், அகில இந்திய அளவுக்கும் கணக்கிட்டு ஒவ்வொரு மாதமும் 12ஆம் தேதி வெளியிடுகிறது.

இந்தியாவின் தொழிலாளர் அமைச்சகத்தின் தொழிலாளர் பணியகம் துறைசார் தொழிலாளர்களுக்கான மூன்று நுகர்வோர் விலைக்குறியீடுகளை வெளியிடுகிறது. அவை பின்வருமாறு

1.ஆலைத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு CPI (IW)

2.விவசாய தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு CPI (AL)

3.கிராமப்புற தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு CPI )RL)

4.உடலுழைப்பில் ஈடுபடாத நகர்ப்புற தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்ணை (UNME) வெளியிடுவது 2010ல் நிறுத்தப்பட்டது.

.

ஊதியங்கள் அல்லது வருவாயை நுகர்வோர் விலைக் குறியீட்டெண்ணால் வகுக்கும் போது,

விலை உயர்வு அல்லது வீழ்ச்சியின் விளைவு நீக்கப்படும். இது பணவீக்க நீக்க செயல்முறை என்று அழைக்கப்படுகிறது, நுகர்வோர் விலைக் குறியீட்டெண் 'உண்மையான ஊதியத்தின் மதிப்பு' அல்லது 'உண்மையான வருவாயை' கணக்கிட பயன்படுத்தப்படுகிறது.

ஊதிய ஒழுங்குமுறைக்கு நுகர்வோர் விலைக் குறியீடு பயன்படுத்தப்படுகிறது. ஊழியர்களின் உண்மையான ஊதியத்தின் மதிப்பு குறையாமல் இருக்க அகவிலைப்படி கணக்கிடுவதற்கு நுகர்வோர் விலைக் குறியீடு பயன்படுகிறது.

பொருட்கள்/சேவைகளின் விலைகளை கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்கும் ஊதியங்கள், கூலிகள், ஓய்வூதியங்கள், ஒரு நாட்டின் நாணயத்தின் வாங்கும் திறன் ஆகியவற்றின் உண்மையான மதிப்பை அளவிடுவதற்கும் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் பயன்படுகிறது.

பொதுவாக, நுகர்வோர் விலைக்குறியீட்டு எண் சில்லறை பணவீக்கத்தை குறிப்பிடும் ஒரு பெரும பொருளாதாரக் குறியீடாகவும், விலையின் நிலைத்தன்மையை ஆய்வு செய்வதற்கும்,பணவீக்கத்தை கண்காணிப்பதற்கும், அதை ஒரு இலக்குக்குள் கட்டுப்படுத்துவதற்கும், தேசியக் கணக்குகளில் பணவீக்கத்தை நீக்குவதற்கும் அரசு, மத்திய வங்கியின் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. நிறுவனங்களும் பல்வேறு பொருட்களின் விலை மாற்றத்தைப் புரிந்துகொண்டு பணவீக்கத்தைக் கண்காணிக்க நுகர்வோர் விலைக் குறியீட்டை பயன்படுத்துகின்றன

மொத்த விலைக்குறியீடு (WPI):

பொதுவாக உள்நாட்டு சந்தையில் செய்யப்படும் மொத்த பரிவர்த்தனைகளின் விலை மாற்றங்கள் மொத்த விலைக்குறியீட்டின் மூலம் அளவிடப்படுகிறது.

ஒரு நாட்டின் மொத்த சந்தைகளில் காணப்படும் பணவீக்கம் இக்குறியீட்டின் மூலம் அளவிடப்படுகிறது.இதன் மூலம் மொத்த வர்த்தகத்திலும், உற்பத்தித் துறைகளிலிலும் ஏற்படும் விலை அலைவுகள் கண்காணிக்கப்படுகிறது. தொழில்துறை, உற்பத்தி, கட்டுமானத் துறைகளில் வழங்கல், வேண்டல் ஆகியவற்றின் இயக்கவியலைக் கண்காணிக்க ஆய்வாளர்கள் இந்தக் குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர்.

இக்குறியீட்டில் ஏற்படும் உயர்வு அதிகரிக்கும் பணவீக்க அழுத்தத்தையும், வீழ்ச்சி பணவாட்டத்தையும் குறிப்பிடுகிறது.

மொத்த விலைக் குறியீட்டை அளவிடப் பயன்படும் பொருட்கள், சேவைகள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மாறுபடும். இது நிறுவனங்களிடையே வர்த்தகம் செய்யப்படும் பொருட்களின் விலையை அடைப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. பொதுவாக உற்பத்தி அமைப்புகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், இடைநிலைபொருட்கள், மூலதனப்பொருட்கள் ஆகியவற்றின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குறியீடு கணக்கிடப்படுகிறது.

இந்தியாவில் மொத்த விலைக்குறியீட்டைக் கணக்கிடுவதற்கான சமீபத்தைய அடிப்படை ஆண்டு 2011-12ஆகும். 2011-12ல் தேர்ந்தெடுக்கப்பட்ட 697 பொருட்கள், சேவைகளை பயன்படுத்தி இக்குறியீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை மொத்த விலைக் குறியீட்டை கணக்கிட்டு ஒவ்வொரு மாத்த்திலும் வெளியிடுகிறது.

முதன்மை பொருட்கள் மொத்த விலைக்குறியீட்டில் ஒரு முக்கிய அங்கமாக உள்ளன. இவற்றை உணவுப் பொருட்கள் என்றும், உணவு அல்லாத பொருட்கள் என்றும் பிரிக்கலாம்.உணவுப் பொருட்களில் தானியங்கள், நெல், கோதுமை, பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள், பால், முட்டை, சர்க்கரை, விலங்கு எண்ணெய்கள், கொழுப்புகள் இறைச்சி மற்றும் மீன் போன்றவை அடங்கும்.உணவு அல்லாத பொருட்களில் எண்ணெய் வித்துகள், கனிமங்கள், கச்சா பெட்ரோலியம் ஆகியவை அடங்கும்.மொத்த விலைக்குறியீட்டின் அடுத்த முக்கிய அங்கம் வகிப்பது எரிபொருள், ஆற்றல் ஆகியவை ஆகும். பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவை இதில் அடங்கும். மொத்த விலைக்குறியீட்டின் மிகப் பெரும் அங்கமாக உற்பத்திப் பொருட்கள் உள்ளன. இவை ஆயத்த ஆடை, காகிதம், வேதிப் பொருட்கள், நெகிழிப் பொருட்கள், சிமெண்ட், உலோகங்கள் காகிதப்பொருட்கள், தோல் பொருட்கள், மரப்பொருட்கள், மருந்துப் பொருட்கள், கருவிகள், மின்சாதனங்கள், உபகரணங்கள் என பலதரப்பட்ட பொருட்களைக் கொண்டுள்ளன.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) ,தேசிய கணக்குகளில் பணவீக்க நீக்கியாக மொத்த விலைக் குறியீடு பயன்படுத்தப்படுகிறது. மத்தியவங்கியின் பணக்கொள்கையையும், அரசின் வர்த்தகம், நிதி,மற்றும் பிற பொருளாதாரக் கொள்கைகளையும் நிர்ணயிப்பதில் மொத்த விலைக்குறியீடு ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

---

## பணவீக்கம் குறித்த மார்க்சியக் கோட்பாடு:

சமந்தா

பணவீக்கத்தின் காரணங்கள்:

சரக்குகளின் விலைகளில் ஏற்படும் உயர்வும் பணத்தின் வாங்கும் திறனில் ஏற்படும் குறைவுமே பணவீக்கம் எனப்படுகிறது. ஒரு சரக்கின் விலையை மூன்று முக்கியக் காரணிகள் நிர்ணயிக்கின்றன.

சரக்கை உற்பத்தி செய்ய ஆகும் செலவு

முதலாளித்துவ சந்தையின் போட்டா போட்டி செயல்முறை

சந்தையில் அப்பொருளுக்கான வேண்டல், வழங்கலில் ஏற்படும் மாறுபாடுகள்.

ஒரு சரக்கின் அடக்கவிலை என்பது அதை உற்பத்தி செய்யத் தேவையான மூலப்பொருட்கள், சாதனங்கள், உழைப்புச்சக்தி ஆகியவற்றிற்காகும் செலவுகளின் கூடுதல் ஆகும். தொழிலாளியிடமிருந்து சுரண்டிய ஊதியமற்ற உழைப்பையும் அதன் மூலம் உருவாக்கப்பட்ட மிகைமதிப்பையும்(உபரி மதிப்பு) முதலாளி இலவசமாக பெறுகிறார் என்பதால் அது இந்தக் கணக்கில் வராது. சரக்குகள் அவற்றின் அடக்கவிலையில் (cost price) விற்கப்படுவதில்லை. அவ்வாறு விற்கப்படுமானால் முதலாளிக்கு லாபம் கிடைக்காது. அடக்கவிலையுடன் சராசரி லாபமும் சேர்ந்ததே சரக்குகளின் உற்பத்தி விலை (production price) எனப்படுகிறது. சந்தையில் (Marketing price) சரக்குகளுக்கான தேவை, வழங்கலில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் சரக்குகளின் சந்தை விலையை அதாவது விற்பனை விலையை நிர்ணயிக்கின்றன.சரக்குகளின் சந்தை விலைகள் பொதுவாக அவற்றின் உற்பத்தி விலைகளை ஒட்டி ஏற்ற இறக்கங்களுக்கு உட்படுகின்றன.

சந்தையில் பொருட்களுக்கான வழங்கலை காட்டிலும் வேண்டல் (தேவை) அதிகரிக்கும் போது

பணவீக்கம் ஏற்படுகிறது. பொருட்களின் வேண்டலைக் காட்டிலும் வழங்கல் குறையும் போதும், பணவீக்கம் ஏற்படுகிறது. உற்பத்தி செலவில் ஏற்படும் அதிகரிப்பும் பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது.

பணவீக்கம் எதனால் தூண்டப்படுகிறது என்பதன் அடிப்படையில் இரு வகையாக வகைப்படுத்தப்படுகிறது.

1. வேண்டலால் தூண்டப்படும் பணவீக்கம், 2. வழங்கலால் தூண்டப்படும் பணவீக்கம்.

1. வேண்டலால் தூண்டப்படும் பணவீக்கம்:

பொருட்களுக்கான மொத்த தேவை பொருட்களின் வழங்கலை/ விநியோகத்தை விட அதிகமாக இருக்கும்போது, பொருட்களின் விலை மட்டத்தில் உயர்வு ஏற்படுகிறது. இதுவே தேவையால் தூண்டப்படும் பணவீக்கம் எனப்படுகிறது.

2. வழங்கலால் தூண்டப்படும் பணவீக்கம்:

பொருட்களுக்கான தேவையை விட பொருட்களின் வழங்கல்/விநியோகம் குறையும் போதும் பொருட்களின் விலை அதிகரிக்கிறது.இது வழங்கலால் தூண்டப்படும் பணவீக்கம் எனப்படுகிறது.எ.கா: வறட்சி, பருவநிலை பொய்க்கும் போது விவசாய விளைச்சல் குறைவதால் விவசாய விளைபொருட்களின் விலைவாசி உயர்கிறது.

புது செவ்வியல் பொருளாதாரத்தின் (neoclassical economy) அளவுக் கோட்பாடு பணவீக்கம் என்பது அடிப்படையில் ஒரு பண நிகழ்வு என்று விளக்கம் அளிக்கிறது. பொருளாதாரத்தில் பொருட்கள், சேவைகளின் விலைகள் பண விநியோகத்தைப் பொறுத்தே அமையும் எனவும், பண வழங்கலை அதிகரிக்கும் போது பொருட்களின் விலை அதிகரிக்கும் எனவும், பண வழங்கல் குறையும் போது பொருட்களின் விலை குறையும் எனவும் குறிப்பிடுகிறது.அதாவது பொருளாதாரத்தில் பண விநியோகத்தை(money supply) அதிகரிப்பதால் பணவீக்கம் ஏற்படுகிறது என்றும் உண்மையான' பொருளாதாரத்தில் உற்பத்தியை விட பண விநியோகம் வேகமாக உயர்ந்தால் பணவீக்கம் அதிகரிக்கிறது என்றும் விளக்கம் அளிக்கிறது.

அளவுக் கோட்பாடு என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தக் கருதுகோளை முதலில்

உருவாக்கியவர் போலந்தைச் சேர்ந்த நிக்கோலஸ் கோபர்னிகஸ் என்ற கணிதவியலாளர். இதை பின்னர் பிரபலப்படுத்தியவர் மில்டன் ஃப்ரீட்மேன் என்ற புது செவ்வியல் பொருளியலாளர்.

புது செவ்வியல் பொருளாதாரத்தில் பணவீக்கம் என்பது தனி நபர்களின் எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக் கொண்டது என்பது போன்ற அகவயமான விளக்கமும் அளிக்கப்படுகிறது.

பணவீக்கம் குறித்து பல கோட்பாடுகள், தத்துவார்த்த அணுகுமுறைகள் உள்ளன, ஆனால் அவை உண்மையான பணவீக்க செயல்பாடுகளை விளக்கமுடியாமல் திணறுகின்றன.மத்திய வங்கியாளர்கள் பணவீக்கம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை உண்மையில் புரிந்துகொள்ளவில்லை என்கிறார் மார்க்சிய பொருளியலாளர் மைக்கேல் ராபர்ட்ஸ்.

செவ்வியல் பொருளாதாரத்தின் மதிப்புக் கோட்பாடு பொருட்களின் விலைகளே சுற்றோட்டத்தில் பணத்தின் அளவை நிர்ணயிக்கிறது என்று குறிப்பிடுகிறது. சரக்குகளின் மதிப்பு அவற்றை உற்பத்தி செய்யத் தேவையாகும் சராசரி உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. சரக்குகள் உள்ளார்ந்த மதிப்பைப் பெற்றுள்ளனவே தவிர பணத்திடமிருந்து மதிப்பை பெறுவதில்லை. சரக்குகளின் விலையை வெளிப்படுத்தும் ஊடகமாகவே பணம் செயல்படுகிறது.

பொருட்களின் விலைகள், பரிவர்த்தனைகள் சுற்றோட்டத்தில் பணத்தின் அளவு, திசைவேகம், ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பை பின்வரும் சூத்திரம் விளக்குகிறது.

PT=MV

இதில் P=சரக்குகளின் விலைகள், T= பரிவர்த்தனைகளின் அளவு அல்லது உண்மையான உற்பத்தி செயல்பாடு, M=பணத்தின் வழங்கல்,V=பணத்தின் வேகம் (பணப் பரிமாற்றங்களின் புரள்வு விகிதம்).

மதிப்புக் கோட்பாட்டின் அடிப்படையிலான இந்த சமன்பாடு சரக்குகளின் விலைகளும், பரிவர்த்தனைகளின் அளவுமே, சுற்றோட்டத்தில் பணத்தின் அளவையும்,திசைவேகத்தையும் நிர்ணயிக்கும் காரணியாக உள்ளன என்பதை விளக்குகிறது.

ஆனால் புதுசெவ்வியல் பொருளாதாரத்தின் அளவுக் கோட்பாட்டின் பணவியல் சூத்திரம் இதற்கு

நேர்மாறாக MV=PT ஆக உள்ளது. இதன் மூலம் பணத்தின் அளவே பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த பணவியல் கோட்பாடு தவறு என நிரூபிக்கப்பட்டுள்ளது ஏனெனில் அது தவறான கருதுகோளிலிருந்து தொடங்குகிறது என்கிறார் மார்க்சிய பொருளியலாளர் மைக்கேல் ராபர்ட்ஸ். பணத்தின் வழங்கல்/ விநியோகமே பொருட்கள், சேவைகளின் விலைகளை இயக்குகிறது எனக் கருதப்படுகிறது. ஆனால் இதற்கு நேர்மாறானதே உண்மை: சரக்குகளின் வெளியீட்டிலும் விலையிலும் ஏற்படும் மாற்றங்கள் தான் பண விநியோகத்தை/வழங்கலைத் தூண்டுகிறது என்கிறார் மைக்கேல் ராபர்ட்ஸ்.

அளவுக் கோட்பாட்டின் பணவியல் சூத்திரமான MV = PTல்

சுற்றோட்டத்தில் பணத்தின் வேகம் (V) நிலையானது என்று பணவியல் கோட்பாடு கருதுகிறது ஆனால் இது உண்மையல்ல, குறிப்பாக பொருளாதாரசரிவின் போதும், பொருளாதார மந்த நிலையின் போதும் பணத்தின் வேகம் குறைகிறது. அளவுக்

கோட்பாடு சுற்றோட்டத்தில் பணத்தின் திசைவேகத்தையும்(V), உண்மையான பொருளாதார பரிவர்த்தனைகளையும்(T) புறக்கணித்துள்ளதே இத்தகைய தவறான புரிதலுக்கு வழிவகுத்துள்ளது என்கிறார்.

MV = PT என்ற பணவியல் சூத்திரத்தை MV PT = MV என திருப்பிப் போடுவதன் மூலமே மதிப்புக்கோட்பாட்டின் அடிப்படையில் பணவீக்கத்தின் இயக்கத்தை புரிந்துகொள்ள முடியும். MV என்பது PTல் மாற்றத்தை ஏற்படுத்தும் மூலகாரணியாக இல்லை. மாறாக PTயே மூல காரணியாக MVல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, PTல் ஏற்படும் மாற்றமே MVஐ இயக்குகிறது.

புது செவ்வியல் பொருளாதாரம் மதிப்புக் கோட்பாட்டை நிராகரித்ததால் பணவீக்கம் குறித்து சரியாக புரிந்துகொள்வதில் தோல்வியடைந்துள்ளது. இதனால் மத்திய வங்கிகளின் பணவீக்க முன் கணிப்புகள் சரிவர மதிப்பிடமுடியாமல் தவறிழைக்கின்றன என்கிறார் மைக்கேல் ராபர்ட்ஸ்.

2009 பொருளாதார மந்த நிலையின் போதும், கோவிட்-19ஆல் தூண்டப்பட்ட பொருளாதாரச் சரிவின் போதும் அதற்கு முன் காணாத அளவுக்கு அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளின் மத்தியவங்கிகள் பண விநியோகத்தை )M) அதிகரித்தன.அதனால் பணத்தின் வேகத்தில் வீழ்ச்சி

ஏற்பட்டது. இதனால் பணவியல் சமன்பாட்டின் இடது புறத்தில் உள்ள MV, பெரிதாக உயரவில்லை என்று விளக்கம் அளிக்கிறார் மைக்கேல் ராபர்ட்ஸ்.

மத்திய வங்கிகள் பணத்தை அச்சடித்து தள்ளுகிறது. அது பொருளாதாரத்தை இயக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதுவோ, வங்கிகளிலும்,பங்குச் சந்தைகளிலும் பதுங்குகிறதே ஒழிய எதிர்பார்த்த அளவிற்கு சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்க வழிவகுக்கவில்லை.

பணவீக்கத்தை சரியாக புரிந்துகொள்ள மார்க்சின் மதிப்பு கோட்பாட்டிற்கு திரும்ப வேண்டும் என்கிறார் மைக்கேல் ராபர்ட்ஸ்.

சுற்றோட்ட ஊடகத்தின் அளவே விலைகளை நிர்ணயிக்கிறது என்பது தவறான கருத்தாகும்.பணத்தின் ஓட்டம் என்பது சரக்குகளின் சுற்றோட்டமே.சரக்குகளின் உருமாற்றங்களின் பிரதிபலிப்பே.பணத்தின் திசைவேகம் என்பது சரக்குகள் தங்கள் வடிவங்களை மாற்றிக் கொள்கிற வேகத்தின் பிரதிபலிப்பே என்று மார்கஸ் கூறுகிறார். பணத்தின் ஓட்டத்தில் தளர்ச்சி என்பது சமூக பரிமாற்றத்தில் தேக்கத்தையே பிரதிபலிக்கிறது. சுற்றோட்டம் இந்தத் தேக்கம் எப்படி ஏற்பட்டது என்பது பற்றி எந்தக் குறிப்பையும் தெரிவிப்பதில்லை. அதன் புலப்பாட்டைக் காட்டுவதோடு நின்றுவிடுகிறது.ஆதலால் பண ஓட்டத் தளர்ச்சிக்கு சுற்றோட்ட ஊடகத்தின் அளவு பற்றாக்குறையே காரணம் எனக் கருதுவது இயல்பு என்கிறார் மார்க்ஸ்.

பணத்தின் வேகம் வீழ்ச்சியடைந்து, உண்மையான பொருளாதார பரிவர்த்தனைகள் குறைந்துவிட்டால், அது பண விநியோகத்தில் செய்யப்படும் எந்த அதிகரிப்பையும் எதிர்க்கும் பணவாட்ட நிலையே நீடிக்கும். பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சியடையும் போது, பொருளாதார மந்தநிலையில் அத்தகைய நிலையே ஏற்படும். எனவே உண்மையான பொருளாதாரப் பரிவர்த்தனைகளில் ஏற்படும் சரிவு பண விநியோகத்தில் ஏற்படும் எந்த உயர்வையும் குறைக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம். அத்தகைய நிலையே தற்போது ஏற்பட்டுள்ளதாக மைக்கேல் ராபர்ட்ஸ் குறிப்பிடுகிறார்.

இதன் மூலம் மத்திய வங்கிகள் எவ்வளவு தான் பணத்தை அச்சடித்தாலும் உற்பத்தி

செய்யப்பட்ட பொருள்களின் பரிவர்த்தனைக்கு தேவையான பணத்தை மட்டுமே சுற்றோட்டத்தால் உட்கிரகிக்க முடியும் என்பதை அறியமுடியும்.

மார்க்சிய பொருளியலாளர்கள் ஜி கார்செடி-யும், மைக்கேல் ராபர்ட்ஸும் பணவீக்கம் குறித்து மதிப்பு விகித பணவீக்கம் என்ற ஒரு புதிய கோட்பாட்டை அளித்துள்ளனர்.

மதிப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கார்செடியின் மதிப்பு விகித பணவீக்கம் (VRI) பொருளாதாரத்தில் உருவாக்கப்படும் புதிய மதிப்பு (கூலி+ இலாபம்=V+S) மற்றும் பண வழங்கல் (வங்கிகளில் பண வைப்புகளாக அளவிடப்படுகிறது (M2)) ஆகியவற்றின் வாங்கும் சக்தியின் மாற்றங்களின் தாக்கத்தை ஒருங்கே கணக்கில் கொள்கிறது. இதில் புதிய மதிப்பு பணவீக்கத்தை நிர்ணயிப்பதில் தீர்மானகரமான பங்கு வகிக்கிறது. பண வழங்கல் பணவீக்கத்தை உயர்த்தும் எதிர் காரணியாக செயல்படுகிறது.

மதிப்பு விகித பணவீக்கம் (VRI) = % ஊதியங்கள் மற்றும் இலாபங்களில் மாற்ற விகிதம் (மொத்த வாங்கும் திறன்=CPP-combined purchasing power) + பண விநியோகத்திலான மாற்ற விகிதம் (M2).

அவர்களின் கோட்பாட்டின் சாராம்சம் என்னவென்றால், நவீன முதலாளித்துவ பொருளாதாரங்களில் பணவீக்கம் வீழ்ச்சியடையும் போக்கு காணப்படுகிறது. ஏனெனில் மொத்த மதிப்பு கூட்டலில் ஊதியங்களின் பங்குகள் குறைந்துள்ளன; மூலதனத்தின் அங்கக மதிப்பு (C/V) உயர்ந்துள்ளது. அதாவது மாறா மூலதனம் எனப்படும் இயந்திரங்கள், ஆலை, மூலப்பொருட்கள் ஆகியவற்றுக்கான முதலீடுகள்(C), மாறும் மூலதனமான கூலியின்(V) அளவை விட )கணிசமாக உயர்ந்துள்ளன.

முதலாளித்துவ உற்பத்தியில் லாபமானது பின்வரும் சூத்திரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

லாபம்=S/C+V

இதில் S= மிகை மதிப்பு (உபரி மதிப்பு), C=மாறா மூலதனம், V=மாறு மூலதனம்.

முதலாளித்துவத்தில் மூலதனத்தின் உயரும் அங்கக மதிப்பால்(c/v) (அதாவது ஊழியர்களுக்கான கூலியுடன் ஒப்பிடும்போது இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் அதிக முதலீடுகளை செய்தல்) நீண்டகால அளவில் இலாபவீதம் குறையும் போக்கு ஏற்படுகிறது மேலும் பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் புதிய மதிப்பின் (S+V) அளவும் குறையும் போக்கு ஏற்படுகிறது என்கிறது இக்கோட்பாடு.

முதலாளித்துவ உற்பத்தி தொடர்ந்து உழைப்பின் உற்பத்தித்திறனை(ஒரு தொழிலாளிக்கு அதிக அலகுகளை உற்பத்தி செய்யும் விதத்தில்) அதிகரிக்க முயற்சிக்கிறது. இதனால் நீண்டகால அளவில் பொருட்களின் மதிப்பு, அதில் அடங்கியுள்ள உழைப்பு நேரம் குறையும் போக்கு ஏற்பட்டுள்ளது. உழைப்பு மட்டுமே மதிப்பை உருவாக்குகிறது. இதனால் பொருட்களையும், சேவைகளையும் அதிக அளவில் வழங்குவதற்கான பொதுவான போக்கு காணப்பட்டாலும், நீண்ட கால அளவில் பொருட்களின் மதிப்பு வீழ்ச்சியடையும் ஒரு பொதுவான போக்கு உள்ளது. ஏனென்றால், முதலாளித்துவ மூலதனத் திரட்டல் என்பது ஒரு தொழிலாளர் சிக்கன செயல்முறையாகும், எனவே உழைப்பின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதால் பொருட்களின் மதிப்பு குறையும். பயன் மதிப்புகள் அவற்றில் உள்ள மதிப்பை விட அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, உற்பத்தியின் விலைகள் மதிப்பைப் பொறுத்து இருந்தால், பொருட்களின் விலை உயராமல் வீழ்ச்சியடையும் இயல்பான போக்கு உள்ளது. மொத்த மதிப்பு காலப்போக்கில் மொத்த உற்பத்தியுடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடையும் (மைக்கேல் ராபர்ட்ஸ்). பயன்மதிப்போடு ஒப்பிடும் போது மொத்த மதிப்பு ஒப்பீட்டளவில் குறையும் மற்றும் மொத்த மதிப்புக்கு ஒப்பீட்டளவில் புதிய மதிப்பு குறையும். எனவே நீண்ட கால அளவில் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடையும் போக்கும், பணவாட்டமும் காணப்படுகிறது.பொருட்கள், சேவைகளின் விலை வீழ்ச்சியடையும் போக்கு இருந்தாலும், இந்த போக்கை தணித்து பண விநியோகத்தை அதிகரிப்பதன் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளின் பண விலையை உயர்த்த வங்கியாளர்கள் முயற்சிக்கிறார்கள்(மைக்கேல் ராபர்ட்ஸ்).

முதலாளித்துவ பொருளாதாரத்தில் மொத்த வேண்டலை எது நிர்ணயிக்கிறது, கூலி, லாபத்தின் மொத்த மதிப்பே பொருட்கள், சேவைகளுக்கான வேண்டலை (demand) நிர்ணயிக்கிறது. கூலியிலிருந்து நுகர்வுப் பொருட்கள் பெறப்படுகிறது, லாபத்திலிருந்து நுகர்வுப் பொருட்கள் வாங்கப்படுவதுடன் முக்கியமாக முதலீடுகள் செய்யப்படுகிறது.கூலி லாபத்தின் மொத்த மதிப்பே பொருளாதாரத்தில் உருவாக்கப்பட்ட புதிய மதிப்பாகும். புதிய மதிப்பு வர்க்கப் போராட்டத்தால் ஊதியங்கள் மற்றும் இலாபங்களாகப் பிரிக்கப்படுகிறது. கூலி நுகர்வோர் பொருட்களை வாங்குகிறது. லாபம் மூலதனம் அல்லது முதலீட்டு பொருட்களை வாங்குகிறது.ஆகவே சரக்குகளுக்கான தேவை என்பது உற்பத்தியில் உருவாக்கப்பட்ட புதிய மதிப்பைப் பொறுத்தது. பொருட்களின் விநியோகத்தின் மீதான தேவை அல்லது வாங்கும் சக்தியை புதிய மதிப்பே

தீர்மானிக்கிறது.

1960 முதல் அமெரிக்காவின் தரவைப் பயன்படுத்தி, பணவீக்கத்தின் மதிப்பு விகிதத்தை ஆய்வு செய்ததில் நீண்ட கால அளவில் பணவீக்கம் வீழ்ச்சியடைந்திருப்பதை இவர்கள் கண்டறிந்துள்ளனர். கூலிகள் மற்றும் இலாபங்களின்(புதிய மதிப்பு) ஒருங்கிணைந்த வாங்கும் சக்தி (CPP) மிகவும் மெதுவாக வளர்கிறது. மதிப்பு விகித பணவீக்கத்தின் வீழ்ச்சியை தடுக்க பண விநியோகத்தில் (M2) செய்யப்படும் எந்த மாற்றமும் போதுமானதாக இல்லை என்று குறிப்பிடுகின்றனர் (மைக்கேல் ராபர்ட்ஸ்).

ஆனால் மதிப்பு விகித பணவீக்கத்திற்கும், நுகர்வோர் விலை பணவீக்கத்திற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? நெருங்கிய தொடர்பு உள்ளது என்கிறார் மைக்கேல் ராபர்ட்ஸ். 1960-1979 க்கும் இடைப்பட்ட காலத்தில், மதிப்பு விகித பணவீக்கமும் உயர்ந்துள்ளது, அமெரிக்க நுகர்வோர் விலை பணவீக்கமும் அதிகரித்துள்ளது; 1980-2019 க்கும் இடைப்பட்ட காலத்தில், மதிப்பு விகித பணவீக்கம் குறைந்துள்ளது, நுகர்வோர் விலை பணவீக்கமும் குறைந்துள்ளது.

பெரும் மந்தநிலை முடிவடைந்ததில் இருந்து பணத்தின் வேகம் கூர்மையாக குறைந்துவிட்டது. பொருளாதாரத்தில் நீண்ட காலத்திற்கு, T ன் வளர்ச்சி அதாவது உண்மையான உற்பத்தி செயல்பாடு அல்லது பரிவர்த்தனைகளின் அளவு மெதுவாக இருக்கும். ஏனென்றால் T என்பது லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட முதலாளித்துவ உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும், முதலாளித்துவத்தில் இயந்திரமயமாக்கத்தின் மூலம் உழைப்பாளர்களை மாற்றீடு செய்து லாபத்தை உயர்த்த முயற்சி செய்யப்படுவதாலும், உற்பத்தி செய்யப்படும் புதிய மதிப்பில் ஒப்பீட்டளவில் சரிவு ஏற்படுகிறது (ஏனென்றால் உழைப்பால் மட்டுமே மதிப்பை உருவாக்க முடியும், இயந்திரங்களால் அல்ல). T இன் வளர்ச்சி குறைவதால், விலையும், பணவீக்கமும் குறையும் போக்கு உள்ளது. இது தரவுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. 1990 களின் பிற்பகுதியில் பெரும்பாலான தேசங்களின் பொருளாதாரங்களில் இலாப விகிதம் வீழ்ச்சியடையத் தொடங்கியதால், புதிய மதிப்பின் வளர்ச்சி குறைந்தது, குறிப்பாக கடந்த பத்தாண்டுகளில், விலை உயர்வு குறைந்துவிட்டது (மைக்கேல் ராபர்ட்ஸ்).

முக்கிய முதலாளித்துவ பொருளாதாரங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் பணவீக்க விகிதம் 1980 களில் இருந்து ஒரு வீழ்ச்சியடைந்து வரும் போக்கு காணப்படுகிறது.

தேவையைத் தூண்டுவதற்கும் 2 விழுக்காடு பணவீக்க இலக்கை அடைவதற்கும் பண விநியோகத்தை அதிகரிக்க மத்திய வங்கிகளின் முயற்சிகள் இருந்தபோதிலும் இந்தப் போக்கு தொடர்கிறது.கடந்த 20 ஆண்டுகளாக, மத்திய வங்கிகளின் வட்டி விகிதங்கள் மற்றும் பணக் கட்டுப்பாடுகளால் 2 விழுக்காடு பணவீக்க இலக்கை அடைய முடியவில்லை என்பதே உண்மை.

கடந்த 30 ஆண்டுகளில் அமெரிக்கா, வளர்ந்த நாடுகளின் நுகர்வோர் விலை குறியீட்டை உற்று நோக்கும் போது பணவீக்க விகிதம் கீழ்நோக்கிச் செல்வதையும், ஆனால் பண வழங்கலின் வளர்ச்சி நிலையானதாகவோ அல்லது உயர்ந்திருப்பதையோ காணமுடியும்.1993 க்கும் 2019 க்கும் இடையில், (M2) பண வழங்கல் ஆண்டுக்கு சராசரியாக 6.7 விழுக்காடு அதிகரித்துள்ளது, ஆனால் பணவீக்கம்(CPI) 2.3 விழுக்காடு மட்டுமே உயர்ந்துள்ளது. 2008 இல் ஏற்பட்ட பெரும் மந்தநிலையிலிருந்து, மத்திய வங்கிகளின் பணவிரிவாக்கக் கொள்கையால், பண வழங்கல் வளர்ச்சி ஆண்டுக்கு 9.6 விழுக்காடாக அதிகரித்தது, ஆனபோதும் பணவீக்கம் (CPI) 1.8 விழுக்காடாகக் குறைந்தது(மைக்கேல் ராபர்ட்ஸ்).

கோவிட் தொற்றுநோய் தாக்கம் ஏற்படுவதற்கு சற்று முன்பு, பணவீக்க விகிதங்கள் மத்திய வங்கிகளால் இலக்கிடப்பட்ட 2 விழுக்காடு இலக்கு விகிதத்தை விட குறைவாகவே இருந்தது. கோவிட் தாக்கத்தால் ஏற்பட்ட பொருளாதார சரிவின் போது 2020ல் வங்கிகள் பண விநியோகத்தை 40 விழுக்காட்டிற்கும் மேல் உயர்த்தியது, ஆன போதும் நுகர்வோர் விலை பணவீக்கம் பெரிதும் மாறவில்லை. பொருளாதாரத்தில் ஒரு மிதமான பணவீக்கத்தை தக்கவைக்கும் வகையில் செயல்படுத்த இயலவில்லை; அதற்கு பதிலாக பணம்/கடன் ஆனது நிதி சொத்துக்கள் மற்றும் ஊக முதலீடுகளை நோக்கியே பாய்கிறது, அந்த சொத்துகளின் விலைகளை புதிய உச்சத்திற்கு உயரச்செய்கிறது (மைக்கேல் ராபர்ட்ஸ்).
2021ல் உலகளவில் சரக்குகளின் வழங்கலில் காணப்படும் தட்டுப்பாடுகளால், பணவீக்கம் உயர்ந்துள்ளதே தவிர பொருளாதாரம் மீண்டெழவில்லை.

முதலாளித்துவ பொருளாத உற்பத்தியின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலமே பணவீக்கத்தின் பாதையை நாம் சரியாக புரிந்து கொள்ள முடியும் என்பதையே கார்செடியின் மதிப்பு விகித பணவீக்கக் கோட்பாடு விளக்குகிறது.

## தமிழ்த் தேசம் வெளியீட்டுக்குழு

பெருந்தொற்றுக்காலம் விரைவில் முடிந்துவிடும் எனக்கொண்டு இயல்பான இயக்கச் செயல்பாடுகளுக்குத் திட்டமிட வேண்டியுள்ளது எனத் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு கருதுகிறது.

பெருந்தொற்றுக் காலத்தை இயன்ற வரை பயனுள்ளதாக்கிக் கொண்டோம். முகில்களின் மேல் அறிவு கொளுத்திய காலமாகவே அதைக் கருதலாம். இணைய வழியில் தோழர் சமந்தாவின் சூழலியல், பொருளியல் வகுப்புகளும், தோழர் தியாகுவின் அரசியல் வகுப்புகளும், நாம் நடத்திய பல்வேறு கருத்தரங்குகளும் அவற்றில் கலந்து கொண்டவர்களின் அறிதலையும் புரிதலையும் வளர்த்துக் கொள்ள உதவின.

அவ்வாறே உரிமைத்தமிழ்த்தேசம் இதழையும் தொடர்ந்து இணையவழியில் வெளியிட்டுஅரசியல், பொருளியல், சூழலியல், வரலாற்றியல் கல்வி புகட்டிவந்தோம்.

என்றாலும் இந்தப்பணிகள் ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே சுருங்கி நின்றதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். பெரும்பாலார் இன்றளவும் இணையத்துக்கும் சமூக ஊடகங்களுக்கும் புறத்தே தான் நிற்கின்றனர். இவர்களைச் சென்றடைய நம் செய்திகளை விரைவில் அச்சுவடிவாக்க வேண்டும். தோழர் சமந்தாவின் சூழலியல் கட்டுரைகளையும், தோழர் தியாகுவின் தமிழ்நாடு இனி பாடக்குறிப்புகளையும், ஈழம் மெய்ப்படும் இடுகைத் தொடரையும் விரைவில் அச்சிலேற்றி நூல் வடிவாக்க வேண்டும். அடுத்தடுத்து மற்றப் பல படைப்புகளுக்கும் நூல்வடிவம் கொடுக்கவேண்டும். நம் பழைய வெளியீடுகளையும் மீள்பதிப்புச் செய்ய வேண்டிய தேவை உள்ளது.

எல்லாவற்றையும் எல்லாரிடமும் கொண்டு சேர்க்கும் வகையில் எளியமக்கள்-பதிப்புகளாக வெளியிட வேண்டும். இந்தப் பொறுப்பைச் செவ்வனே செய்திட தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது:

தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழுவில் நான்கு உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். மதுரை வழக்கறிஞர் தோழர் நா. கதிர்வேல்அமைப்பாளராகவும், தோழர்கள் பால்ராஜ், அருண்மாசிலாமணி, சுந்தர் ஆகியோர் குழு உறுப்பினர்களாகவும், தோழர் தியாகு பதிப்பாசிரியராகவும் பொறுப்பு வகிப்பார்கள்.

**தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழு எளியமக்கள்-பதிப்புகள் வெளியிட இயன்றவரை எளிய மக்கள் தரும் நன்கொடைகளையே நம்பியுள்ளது. பணம் அனுப்ப அல்லது**

**வைப்பகக்கணக்கில் செலுத்த:**

**நா. கதிர்வேல், வழக்கறிஞர்,**

**மகராஜன்நகர், 5/242, ஆசிரியர்குடியிருப்பு,**

**விரகனூர், மதுரை 625 009.**

**பேச: 9894913820மின்னஞ்சல்: vel.kathir325@gmail.com**

**Bank Details:**

**N. Kathirvel,**

**Tamilnadu Mercantile Bank,**

**Iravathanallur Branch,**

**Madurai. Account No. 343100050300634 I**

**FSC Code: TMBL0000343**